Registered No. M. 5068

# ஆஸாத்

தமிழ் தேசிய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0] ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள். [தனிப் பிரதி 0—2—0

மலர் 1 { சர்வதாரி௵ சித்திரை௴ 21௳ 3—5—1948 ஹிஜிரி 1367 ஜமாதிலாஹர்௴ 23௳ திங்கட்கிழமை. } இதழ் 15

## தொழிற்சாலை
# முதலாளிகள், தொழிலாளிகள்

இந்திய பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேருவின் வேண்டுகோள் தொழிற்சாலை முதலாளிகள், தொழிலாளர்களுக்கிடையே ஐந்துவருஷ இடைக்கால சமரச ஒப்பந்தம் ஏற்படுவதை சாத்தியமாக்கிற்று. ஆயினும் நடைமுறையில் ஒப்பந்தம் அனுஷ்டிக்கப்படவில்லை. அதனால் பம்பாய், அஹமதாபாத் முதலிய இடங்களில் வேலை நிறுத்தங்கள் ஆரம்பமாயின. வேலை நிறுத்தங்கள் ஒப்பந்தத்துக்கு முரணானவை என்று முதலாளிகள் குறைகூறினர். முதலாளிகள்மீது தொழிலாளிகள் குற்றம் சாட்டினர். பரஸ்பர குற்றச்சாட்டுகளால் நாட்டிற்கு எவ்வித நன்மையும் ஏற்பட முடியாதென்பது நிச்சயம். வேலை நிறுத்தங்கள் நடக்காமல் உற்பத்தி பெருக்குவதிலேயே நாட்டின் நன்மை அடங்கியிருக்கின்றது. அதற்கு சுமுகமான சூழ்நிலை அவசியம். அவ்வித சூழ்நிலை ஏற்படாதவரை உற்பத்தி பெருகவோ நாடு முன்னேற்றமடையவோ முடியாது.

அதிர்ஷ்டவசமாக தொழிலாளர் மந்திரி ஜகஜீவன் ராம் இத்துறையில் கவனம் செலுத்தியிருக்கிறார். முதலாளி, தொழிலாளி, சர்க்கார் பிரதிநிதிகளின் முக்கூட்டு மகாநாடு நாட்டுக்கு நல்ல சகுனமாகும். தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும்படி முதலாளிகளுக்கு ஸ்ரீ ஜெகஜீவன் ராம் யோசனை கூறியது முற்றிலும் சரியே. அரசாங்கத்தின் தொழில் கொள்கையின் ஒரு அம்சமான முதலாளி, தொழிலாளி, சர்க்கார் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டு ஆலோசனைக் கமிட்டிகளின் அவசியத்தை தொழிலாளர் மந்திரி வற்புறுத்தினார். அதனால் தொழிற்சாலைகளின் உற்பத்தி பெருகுவதுடன் தொழிலாளர்களுக்கு உழைப்புக்குத்தகுந்த கூலியும் லாபத்தில் பங்கும் அதிகரிக்க முடியும்.

அரசியல் காரணங்களுக்காக தொழிலாளிகள் தூண்டப்படுவதாக முதலாளிகள் மகாநாட்டுத் தலைவர் சொல்லுவது உண்மையே. ஆயினும் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த இதுவரையில் முதலாளிகள் எவ்வித நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ளவில்லை என்ற குற்றசாட்டிற்கு அவர் பதிலளித்தேயாக வேண்டும். இடைக்கால சமரச ஒப்பந்தத்திற்கு முன்பு நடத்தப்பட்டதைப் போலவே பிறகும் தொழிலாளர்கள் நடத்தப்படுகின்றனர். தொழிலாளர்களின் சம்பளத்தை உயர்த்தவும் அவர்களுக்கு உகந்த முறையில் வேலை நேரத்தை நிர்ணயிக்கவும் லாபத்தில் நியாயமான பங்கு கொடுக்கவும் முன்வந்திருக்கும் முதலாளிகள் எத்தனைபேர்?

''தனிகை தட்டாது'' என்பது பழமொழி. ஆகையால் தொழிற்சாலை முதலாளிகளும் நியாயமான அளவுக்கு விட்டுக் கொடுக்க முன்வர வேண்டும். வேலை நிறுத்தங்களை தூண்டிவிடும் நண்பர்களைப் போலவே சுயநலக்கார தொழிற்சாலை முதலாளிகளும் நாட்டின் நலனுக்கு விரோதிகளேயாவர். அவ்வித இழுக்கைப் போக்கிக்கொள்ள தொழிலாளிகளின் நலனுக்கு அவர்கள் முக்கியத்துவம் கொடுத்தாக வேண்டும். இன்று அநேக மில்முதலாளிகள் நிர்ணயிக்கப்பட்ட விலைக்குமேல் இரண்டு பங்கு வசூலித்து வருகின்றனரென்பதை யாரும் மறுக்க முடியாது. அது சரியல்ல வாயினும் லாபத்தைப் பெருக்கிக்கொண்டவர்கள் தொழிலாளிகளின் நலனுக்குக்காக என்ன செய்திருக்கின்றனர் என்று கேட்காமலிருக்க முடியாது. நம்முடைய தொழில்லாளர்கள் மந்திரி கனம் ஜகஜீவன் ராம் ஆவன செய்வாரென்று நம்புவோமாக!

# பாகிஸ்தானில் பாதுஷாகான்

—( அப்துல்லா பட் )—

அன்பே வாழ்க்கையின் செல்வம் மலைகளை குடைய வும், கடல்களை கடக்கவும் ஊக்கமளிப்பது அன்பு தான். பிரயாணத்திலுள்ள கஷ்டங்களை பொருட் படுத்தாமல் என்னை கராச்சிக்கு இழுத்துச்சென் றதும் அன்பின் காந்த சக்தியே. பாகிஸ்தான் ஏற் பட்ட பிறகு கராச்சிக்கு முதல் தடவையாகச் சென் றேன். பழைய நண்பர்களை சந்தித்தேன். மலர்ந்த முகங்கள் கலவரங்களின் அனல் காற்றால் வாடி வத ங்கி காட்சி அளித்தன. ஆயினும் சுதந்திர நாட்டில் சுதந்திர சுபிட்ச வாழ்க்கை நடத்த புதியதொரு ஆட் சியை நிர்மாணிக்கும் வேலையில் தங்கள் பங்கை செய்ய அவர்கள் ஆயத்தமாகவே இருந்தனர். ஆக ஸ்டு 15-க்குப்பிறகு பழைய அரசியல் போக்குடன் பழைய மனக்கசப்புகளும், பேதங்களும் மறைந்து போயிருந்தன. மாறுபட்ட நிலைமையால் எழுந்த புதிய பிரச்சனைகளை பாகிஸ்தானிகள்என்ற மனோபாவத்தில் கூடி விவாதித்தோம்.

பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபைக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. முதல் தடவையாக பாதுஷாகான் அதில் கலந்துக் கொண்டிருந்தார். படித்தவர்கள்,பாமரர்கள் எங்கும் அதே பேச்சாகவே இருந்தது. பாகிஸ்தான் நிர்மாணத்தில் பாதுஷாகான் பங்கெடுத்துக்கொண்டதைக் குறித்து அனைவரும் சந் தோஷம் தெரிவித்தனர்.

எல்லைப் புரத்தின் வீரத்துறவி, பட்டாணியர் களிடையே அரசியல் விழிப்பு உண்டாக்க அரும்பாடு பட்ட உத்தமர், அரசியல் அரங்கத்தின் அனுபவம் மிக்க சோல்ஜர் பாதுஷாகான். வெண்மையான தாடி யால் ஒருவரும் அவருடைய இளம் நோக்கங்களையும் உறுதியையும் அளவிட முடியாது. அவர் நடத்தும் எளிய வாழ்க்கையைக் கொண்டு அரசியலில் அவருக் குள்ள உயர் ஸ்தானத்தை உணர்வது துர்லபம். ஆயி னும் அன்பு கனிந்த பார்வை அவருடைய உள்ளத் தூய்மையும் அந்தரங்கச் சுத்தியையும் ஸ்பஷ்டமாக எடுத்துக் காட்டுகிறது.

சில வருஷங்களுக்கு முன் டில்லியில் முதல் தட வையாக சந்தித்தபோது அவருடைய பார்வையே என்னை வசீகரித்தது. ஒவ்வொரு சந்திப்பிலும் அது வளர்ந்து வந்தது. அவரை சந்திக்க நானும் நார்த் வெஸ்டர்ன் ஹோட்டல் (North western hotel) சென்றேன். பாகிஸ்தான் ஏற்பட்ட பிறகு நம் முடைய முதல் சந்திப்பு அதிக நேரம் நீடித்தது. அரசியல் நிர்ணய சபைக் கூட்டம் நடந்து கொண் டிருந்ததால் அதைக் குறித்தே பெருமளவு சம்பாஷி த்தோம்.

"வைஸ்ராய் ஏற்பாட்டின்படி டில்லியில் மிஸ் டர் ஜின்னாவை சந்தித்தபோது ஒன்றும் செய்ய முடி யாதவனாக நான் அரசியல் நிர்ணய சபைக்குப் போக விரும்பவில்லையென்று தெளிவாக அவரிடம் சொல்லி யிருந்தேன். உங்களைச் சுற்றியுள்ளவர்கள் சுதந்திர சுகங்களை பாகிஸ்தான் பொதுமக்களும் அனுபவிக்கும் விதமான எந்த ஒரு காரியமும் நடக்கவிடமாட் டார்கள். நானோ குதாயீகித் மத்கார்களின் பிரதிநிதி மக்களுக்குத் தொண்டாற்ற கடவுள் முன்னிலையில் சத்தியம் செய்திருக்கிறேன். ஆண்டவனின் மக்க ளுக்கு சேவை செய்ய முடியாமல் போன பிறகு நான் ஆண்டவனுக்கு எப்படி முகம் காட்டுவேன். இன்றைய முஸ்லிம் லீக் நிர்வாகம் எவ்வித புரட்சி கரமான மாறுதலையும் ஏற்படுத்த முடியாதென்று அந்தரங்க சுத்தியுடன் அபிப்பிராயப் படுகிறேன். உண்மையில் புரட்சியுடன் நம்முடைய தேசீய வாழ் க்கை பிணைக்கப்பட்டிருக்கிறது" என்று பாதுஷாகான் அழுத்தமாகக் கூறினார்.

அசெம்பளியில் மிஸ்டர் லியாகத் அலிகானுக்கும் சுஹரவர்த்திக்கும் இடையே நடந்த வாக்கு வாத த்தைக்குறித்து கேட்டபோது "அவர்கள் நம்முடைய பேச்சுக்கு பதிலளிப்பதில்லை, ஆனால் நமக்கு எதிராக பிரசாரம் செய்து வருகின்றனர்" என்று கான் வருத் தம் தெரிவித்தார்.

அசெம்பளியில் தனக்கும் பாகிஸ்தான் பிரதமர் லியாகத் அலிகானுக்கும் நடந்த வாக்கு வாதத்தைக் குறிப்பிடுகையில், "பாகிஸ்தான் ஒரு ஏழை நாடு என்று இவர்கள் சொல்லுகின்றனர். ஏழை நாடாக இருந்தால் நீங்கள் சுகபோக வாழ்க்கையை விட்டு விடுங்கள். ஏழை பொது மக்களுக்கு நன்மை பயக்கக் கூடிய விதத்தில் ஏதாவது செய்யுங்கள். ஆடம்பர வாழ்க்கையை விட்டு ஏழைகளைப்போல் எளிய வாழ்க் கையை நடத்துங்கள். என்று நான் சொல்லுகிறேன். அதற்கு அவர்கள் நீங்களெல்லாம் பாகிஸ்தானை எதிர்த் தவர்கள் என்று பதிலளிக்கின்றனர்."

நாம் பாகிஸ்தானை எதிர்த்தோம். ஆயினும் பிரிவினைக்குப் பிறகு பாகிஸ்தானிகளாக இருக்கின்றோம். பாகிஸ்தான் கொடி நம்தேசத்தின் கொடியாகிவிட்டது. நீங்கள் என்னதான் குறை கூறினாலும் நம் நாட்டை நிர்மாணிப்பதில் நாம் பங்கெடுத்துக் கொள்ளுவோம்.' என்று நான் சொல்லுகிறேன். எல்லாம் தெரிந்தபிறகும் பொதுமக்கள் இதுவரை அவர்களுடைய வலையில் மயங்கிக் கிடப்பதுதான் வருந்தத் தக்க விஷயமாகும்.

"எவர்களிடம் உண்மையான இஸ்லாம் இருக்கின்றதோ அவர்கள் நிர்வாக ஆசனங்களில் இடம் பெறவில்லை. நீங்கள் இஸ்லாமின் உரிமையாளர்களாகி விட்டீர்கள். உங்களுடைய வாழ்க்கையில் இஸ்லாமுக்கு ஒத்திருக்கும் ஏதாவது ஒரு அம்சத்தைக் காட்டமுடியுமா?" என்று மிஸ்டர் லியாகத் அலிகானை நான் கேட்ட பொழுது "இது ஆண்டவனின் அருள் யாருக்கு வேண்டுமானாலும் அவர் கொடுக்கலாம்" என்று பதிலளிக்கிறார். இந்நிலையில் நிலைமை எவ்வாறிருந்த முடியும்" என்று கான் கேட்டார்.

"பாகிஸ்தான் நிர்மாண வேலைக்காக பொது மக்கள் ஸ்தாபனம் அமைக்க முயற்சிக்கின்றீர்களா?" என்று நான் கேட்டபோது "நான் பலரை சந்தித்தேன். பொதுமக்கள் நிம்மதி இழந்து வருகின்றனர். வீரர்களும் நம்பிக்கை இழந்து விட்டனர். ஆயினும் நாம் நம்பிக்கை இழக்க எவ்விதக் காரணமும் இல்லை. பல அன்பர்கள் என்னிடம் பீப்பிள்ஸ் பார்ட்டி (People's party) ஏற்படுத்த யோஜனை கூறினர். அதற்காக கன்வென்ஷனும் கூட்டப்பட்டிருக்கிறது. ஜனநாயகத்தை ஏற்படுத்த அந்த ஸ்தாபனம் உழைக்கும் பாகிஸ்தான் அடைவதே முஸ்லீம் லீகின் லட்சியம். ஆகையால் இனி அதன் அவசியம் இல்லை தேசத்தில் ஜனநாயக அடிப்படையுள்ள அரசியல் ஸ்தாபனங்கள் ஏற்பட வேண்டும்" என்றார்.

"இன்று அதிகாரத்திலிருப்பவர்கள் உங்களுக்கு எதிராக பிரசாரம் செய்தால் உங்களுடைய பதில் என்னவாக இருக்கும்?" என்று கேட்டதற்கு பாதுஷாகான் மிகத்தெளிவாக கீழ் வருமாறு கூறினர்.

"இன்று அதிகாரத்தில் இருப்பவர்கள் இதே நிலைமையில் நம்மை சகித்துக் கொண்டிருப்பார்கள் என்று நாம் எதிர்ப்பார்க்க முடியுமா? தனி நபர் ஆதிக்கத்தையும் கண்மூடித்தனமாக பின்பற்றுவதையும் கண்டித்து இன்றைய நிலையை சீர்செய்ய நாம் நடவடிக்கையில் இறங்கினால் அவர்கள் நமக்கு எதிராக மதகோஷங்களை உபயோகிக்கலாம். மதத்திற்கு முற்றிலும் மாறுப்பட்டவர்களாக இருப்பினும் மதத்தின் பெயரை பிரயோஜனப் படுத்திக்கொள்ள தயங்கமாட்டார்கள். சில முட்டாள் ஆலிம்கள் அவர்களை ஆதரிக்கவும் செய்யலாம். ஆயினும் நம்முடைய எதிர்கால போக்கின் தன்மையே அதற்கெல்லாம் போதிய பதிலாக இருக்கும். நமக்கு எதிராக ஆதாரமற்ற குற்றச் சாட்டுகளை சிருஷ்டிக்கும் இவர்கள் நாளை ஆண்டவனுக்கும் நபிநாயகத்துக்கும் என்ன பதிலளிக்கப் போகின்றனர்? நாம் சொந்த நலனுக்காக ஒன்றும் செய்யமாட்டோம். நம்முடைய நஷ்டம் ஆண்டவனுடைய மக்களுக்கு நன்மை பயக்க முடியுமென்றால் அதைவிட சிறந்த தியாகம் வேறு எதுவாக இருக்க முடியும்."

முடிவில் எல்லைப்புற அரசியல் பற்றி சம்பாஷித்தோம். இன்று பட்டாணியர்களை எதிர் நோக்கியிருக்கும் பல கஷ்டங்களை பாதுஷாகான் விவரித்தார்.

---

## ஹைதராபாத் கண்டனக் கூட்டம்.

23-4-48 திருவிடமருதூர் முஸ்லிம்கள் சார்பில் ஹைதராபாத் போக்கைக் கண்டிக்க பொதுக்கூட்டம் நடந்தது. நாட்டாண்மை பக்கிரி மஸ்தான் ராவுத்தர் தலைமை வகித்தார். குடந்தை M. அப்துல் சத்தார் சென்னை தேசிய வாலிபர் சங்க காரியதரிசி ரத்னம், 'ஆஸாத்' ஆசிரியர் அப்துல் அஜீம் முதலியோர் நிஜாமின் யதேச்சாதிகாரத்தையும் ரஸ்வியின் பொருப்பற்ற பேச்சையும் கண்டித்துப் பேசினர்கள். தென்னாட்டு முஸ்லிம்கள் நிஜாமை நேர்வழிப்படுத்த முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டதுடன் கீழ்வரும் தீர்மானம் அப்துல் கபூர் பிரேரேபித்து சுபஹான் ஆமோதிக்க ஏக மனதாய் நிறைவேற்றப் பட்டது. "ஹைதராபாத் யதேச்சாதிகாரத்தைக் கண்டிப்பதுடன் சிறையிலிருக்கும் தேச பக்தர்களை விடுதலை செய்து சட்டபூர்வமான பொருப்பாட்சியை ஏற்படுத்தி காஸிம் ரஸ்வி போன்ற கலகக்காரர்களை அடக்கி சமாதானத்தை நிலை நிறுத்தி இந்திய யூனியனுடன் சேரும்படி நிஜாம் சர்க்காரை திருவிடமருதூர் முஸ்லிம்களின் இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை.

மலர் 1 | 3—5—'48 திங்கட்கிழமை | இதழ் 15

# இரு சமுதாய அலங்கோலம்.

1918ல் எழுதிய சுயசரிதையின் ஐந்தாவது அத்தியாயத்தில் ஹிந்துக்களும், முஸ்லிம்களும் தனி இரண்டு சமுதாயங்கள் என்றும், அவர்களிடையே ஒன்றுபட்ட அம்சம் எதுவும் இல்லையென்றும், முஸ்லிம்களின் சம்மந்தமற்ற சுதந்திர ஆட்சி ஒன்றை ஹிந்துக்கள் அமைத்துக் கொள்ள வேண்டுமென்றும், ஹிந்து மஹாசபையின் பிரபல தலைவர் பாய் பரமானந்தர் முதல் தடவையாக வெளியிட்டார். 1940-ஆண்டில் பத்துகோடி முஸ்லிம்களுக்காக ஒரு தனித்தாயகம் வேண்டுமென்று பெரும்பான்மை முஸ்லிம்கள் கோரிக்கை விடுத்தனர். சுதந்திர இந்தியா சர்வ தேசிய அரசியலை இஷ்டம்போல் ஆட்டிவைக்குமென பீதியடைந்த மூன்றுவல்லரசுகள் எப்படியாவது கூறுபோட்டு இந்தியாவின் ஐக்கிய சக்தியை சிதறடித்துவிட தீர்மானித்தன. ஒரு புறம் முஸ்லிம்களின் கோரிக்கை; இன்னொருபுறம் மூன்று வல்லரசுகளின் தீர்மானம்; அதன் பயனாக எண்பது சத விகித இந்தியர்கள் இருபது சத விகித இந்தியாவை பிரித்துவிடுவதற்கு இசைந்துவிட்டனர். இவ்விதம் பாகிஸ்தானும் அமைந்தது. இந்தியாவுக்கும் சுதந்திரம் கிடைத்தது. பாய் பரமானந்தர் முப்பது வருஷங்களுக்கு முன் வெளியிட்ட ஹிந்து ராஜ்ய எண்ணம் அநேக ஹிந்துக்களின் உள்ளங்களில் எதிரொலிக்க ஆரம்பித்தது. இந்தியாவை விட்டு வெளியேறி 10-கோடி முஸ்லிம்களுக்காக வென்று வாங்கப்பட்ட பாகிஸ்தானில் முஸ்லிம்கள் குடியேறுவதுதான் நியாயமென்று இந்தியாவின் சில பாகங்களிலுள்ள ஹிந்துக்கள் முடிவுசெய்தனர். பாகிஸ்தானில் அவதிப்பட்டு வெளியேறி வந்த ஹிந்து சீக்கியர்களின் பரிதாபகரமான நிலைமை அவர்கள் செய்த முடிவுக்கு ஊக்கமளித்தது. அடிக்கடி மிஸ்டர்ஜின்னா சொல்லி வந்ததைப்போல் ஜனமாற்றம் ஆரம்பமாயிற்று.

மஹாத்மா காந்தி ஜனமாற்றத்தை எதிர்த்து வந்தார். ஜனமாற்றத்தால் இரண்டு நாடுகளும் அழியநேரிடும் என்று எச்சரித்தார். வெளியேறியவர்கள் முடிவில் தங்கள் வீடுகளுக்கே திரும்பவேண்டியிருக்கும் என்று மஹாத்மாஜி முன்கூட்டியேசொல்லியிருந்தார். இன்று அது உண்மையாகி வருகின்றது. மக்கள் வெளியேறிக்கொண்டும் இருக்கின்றனர். வெளியேறியவர்கள் திரும்பி வந்துகொண்டும் இருக்கின்றனர். முஸ்லிம்கள் திரும்பி வருகின்றனர். ஹிந்துக்கள் திரும்பிப் போகின்றனர். முஸ்லிம்கள் வெளியேறிச்செல்லுகின்றனர். ஹிந்துக்கள் வெளியேறி வருகின்றனர். இன்றைய நிலைமை இதுதான். இரண்டு சர்க்கார்களும் ஒன்றும் செய்யமுடியாத நிலைமையில் பார்த்துக்கொண்டுதான் இருக்கின்றன. பல்லாயிரக்கணக்கான ஹிந்துக்கள் லாகூர் போய் சேர்ந்துகொண்டிருப்பதாக தகவல்கள் கிடைத்துக்கொண்டிருக்கின்றன. இரு தேசங்களின் எல்லையில் வியாபாரம் மும்முரமாய் நடந்துவருகிறது. ஹிந்து, முஸ்லிம், சீக்கியர் ஒருவரை ஒருவர் ஆலிங்கனம் செய்துகொள்ளுகின்றனர். ஏப்ரல் 8.ந்தேதி வரை ஜோத்பூர் ரயில்வே மூலமாக சிந்துவிலிருந்து மட்டும் எண்பதினாயிரம் முஸ்லிம்கள் இந்தியா வந்து சேர்ந்திருக்கின்றனர். அதற்குப் பிறகு இதுவரை தினம் ஒன்றுக்கு 5000-த்துக்கும் அதிகமான முஸ்லிம்கள் இந்தியா வந்து சேர்ந்து கொண்டிருக்கின்றனர். மேற்கு பஞ்சாபிலிருந்தும் எல்லைப்புரத்திலிருந்தும்திரும்பிவரும் முஸ்லிம்களின் எண்ணிக்கை இத்துடன் சேர்க்கப்படவில்லை. இந்திய பார்லிமெண்டில் மிஸ்டர் விஸ்வநாததாஸ் கேட்ட ஒரு கேள்விக்குஎண்ணாயிரம் முஸ்லிம் உத்தியோகஸ்தர்களும் இந்தியாவுக்கு திரும்பிவர விரும்புவதாக பதிலளிக்கப்பட்டது. இந்தியப்பிரிவினை முஸ்லிம் உத்தியோகஸ்தர்களின் குடும்பங்களையும் பிரித்துவிட்டது. புருஷன் பாகிஸ்தானில் உத்தியோகம் பார்க்கின்றான்; பெண்ஜாதி,பிள்ளைகள் இந்தியாவில் இருந்துவருகின்றனர். பெற்றோர் இந்தியாவில்; மக்கள் பாகிஸ்தானில். வியாதி இங்கே; கவலை அங்கே. சாவது அங்கே; பிரலாபிப்பது இங்கே; இவ்வித பரிதாபகரமான நிலைமையில் முஸ்லிம் உத்தியோகஸ்தர்களின் குடும்பங்கள் தவித்துக்கொண்டிருக்கின்றன. நோயுற்று, வறுமைமிஞ்சி, நிலைதவறி, வாழ்க்கையின் சகல சுகங்களையும் இழந்து இந்தியா திரும்பி வரும் முஸ்லிம்கள் டில்லி ஸ்டேஷனில் மட்டும் தினம் 1-க்கு ஐநூறுக்கும் அதிகமாக வந்து இறங்குகின்றனர். "ஆறு லக்ஷத்துக்கு அதிகமாக மேவுபட்டாணியர்களாகிய நாம் பாகிஸ்தானுக்குச் சென்றோம். ஒரு லட்சத்துக்கும் அதிகமானவர்களின் கபரஸ்தான் பாகிஸ்தானில் அமைந்துவிட்டது. வருங்கால மேவுபட்டாணிய சந்ததியாக விளங்கவேண்டிய குழந்தைகள்மாண்டன. எனி

# பாலஸ்தீன திருவிளையாடல்.

கடந்த உலக மகாயுத்தத்தில் அவதிப்பட்டுக் கொண்டிருந்த யூதர்களையும் பிரயோஜனப் படுத்திக் கொள்ளாமல் பிரிட்டன் விட்டுவிட வில்லை. பாலஸ்தீனத்தில் ஒரு தனித் தாயகம் சிருஷ்டித்து கொடுப்பதாக ஆசைகாட்டி அவர்களிடமிருந்து பிரிட்டன் உதவியடைந்து கொண்டிருந்தது காரியமானவுடன் காலைவாரிவிடுவது பிரிட்டனின் பிறவிக் குணம். யூதர்களுக்கு அளித்த வாக்குறுதியையும் தட்டிக்கழித்துவிட பிரிட்டன் ஆரம்பிப்பதற்குள் பாலஸ்தீனத்தில் ஏராளமான யூதர்கள் குடியேறி விட்டனர். அவர்களை ஒரேயடியாக அலட்சியம் செய்துவிட முடியாத சங்கடமான நிலைமை பிரிட்டனுக்கு ஏற்பட்டுவிட்டது அதனால் பாலஸ்தீன பிரச்னை இதுவரை தீராமலேயே இருந்துவந்தது.

இன்று பாலஸ்தீனக்கில் நடக்கும் காரியங்களைப் பார்த்தால் அரபுதேசங்களை அமெரிக்க கோஷ்டியுடன் இணைக்க அமெரிக்காவுக்கு பிரிட்டன் உறுதியளித்திருப்பதாகத் தெரிகிறது. அதே சமயத்தில் அமெரிக்காவுக்குத் தொந்தரவு உண்டுபண்ணும் முறையில் போகிற போக்கிலே பிரிட்டன் பொடி வைக்கும் வேலையும் செய்து வருகின்றது அரபியர்களுக்கு ஆயுதங்கள் சப்ளை செய்து யூதர்களுடன் சிண்டு முடிந்துவிட்ட முழுப்பொறுப்பும் பிரிட்டனையே சாரும். இன்னொரு பக்கம் யூதர்களுக்கு அமெரிக்கா அந்தரங்கமாக உதவி செய்து வருகின்றது. பாலஸ்தீனத்தை விட்டு வெளியேறும் பிரிட்டிஷார் ஒரு புறம் அரபியர்களுக்கு ஆயுதங்களைக் கொடுக்கின்றனர். இன்னொருபுறம் முக்கிய துறைமுகங்களை காலிசெய்து யூதர்களுக்கு விடுகின்றனர். அதனால் அரபு தேசங்களின் அனுதாபம் பாலஸ்தீன அரபுகளுக்கு கிடைக்கும்படிச் செய்வதே பிரிட்டனின் நோக்கம். அந்நிலையில் அரபு ராணுவத்தை பாலஸ்தீனத்தில் இறக்குமதி செய்யும்படி அரபு தேசங்களை சுலபமாக தூண்டுவது சாத்தியமாகும். பிறகு ஏற்படக்கூடியயுத்தத்தைநிறுத்துவதற்காக அரபு தேசங்களும் சரி, அமெரிக்காவும் சரி பிரிட்டனின் தயவையே நாடவேண்டியிருக்கும்.

பொருளாதாரக் கட்டுக்கோப்பு தகர்ந்து, சோற்றுக்கும் துணிக்கும் திண்டாடிக்கொண்டிருந்தாலும் பிரிட்டன் மூளையிலிருந்து சூழ்ச்சிகள் மட்டும் போய் விடவில்லை. இன்றைக்கும் அதனிடம் பல அகப்பைக் குச்சிவரிசைகள் இருக்கத்தான் செய்கின்றன. இன்று பாலஸ்தீனத்தில் யூத அராபிய ரத்தம் பெருக்கெடுத்து ஓடுவதர்க்கு பிரிட்டிஷ் சூழ்ச்சிகளே காரணம் இருப்பினும் தான் நிரபராதி என்றே பிரிட்டன் உலகத்தில் பறைசாற்றி வருகின்றது. இந்தியாவில் லட்சக்கணக்கான ஹிந்து முஸ்லிம்கள் ரத்தம் சிந்தும்படி செய்துவிட்ட பிறகும் இந்தியா பாகிஸ்தான் இரண்டிலும் கவுரவம்தேடிக் கொண்டிருப்பதைப் போலவே பிரிட்டன் அராபியர்களையும், யூதர்களையும் முட்டாள்களாக்கி சிண்டு முடிந்துவிட்டு தன் விளையாட்டை விளையாடிக்கொண்டிருக்கிறது பாலஸ்தீன மக்கள் முட்டாள்களாகமட்டும் இல்லாமலிருந்தால் அவர்கள் தங்களுக்குள்ளேயே சமரசம் செய்து கொள்ள வேண்டும். துரதிர்ஷ்ட வசமாக அவ்விதம் நடக்குமென்று எதிர்பார்ப்பதற்கில்லை. அதனால் பாலஸ்தீனத்துக்கு எவ்வித நன்மையும் ஏற்பட முடியாது. ஆனால் பிரிட்டன் அமெரிக்கா இரண்டுக்கும் நல்ல வேட்டைதான்.

---

லும் பாகிஸ்தானில் அடைக்கலம் புகநமக்கு இடம் கிடைக்காமல் போய்விட்டது. இன்று வெறுங் கையுடன்இந்தியா திரும்பிவந்துசேர்ந்திருக்கின்றோம். தெய்வத்தின் வற்றாத களஞ்சியத்தில் நமக்காகஏதாவது மிச்சம் இருக்கலாம்" என்று தங்களை சந்தித்த 'மதீனா' நிருபரிடம் சொல்லி மேவு பட்டாணியர்கள் கண்ணீர் வடித்ததாக 'மதீனா' எழுதுகின்றது. "இந்தியா திரும்பிவரும் அகதிகளை வரவேற்கின்றோம் ஆயினும் நிலங்களையும்; சொத்துக்களையும் திருப்பிக் கொடுப்பதாக இன்னும் உறுதியளிப்பதற்கில்லை." என்று கிழக்கு பஞ்சாப் மந்திரி ஈஸ்வர்சிங் மஜீல் சென்ற மாதம் 15ந் தேதியன்று கபுர்தலாவில் பேசினார். "பாகிஸ்தானிலிருந்து திரும்பிவரும் முஸ்லிம்களை மனப்பூர்வமாக வரவேற்கிறோம். இந்தியாவின் கதவு அவர்களுக்காக திறந்து வைக்கப்பட்டிருக்கிறது நேர்மை, ஒழுக்கம் அன்பு, நிறைந்த உள்ளத்துடன், சுதந்திர இந்தியா நடந்துகொள்ளுமென நம்புகிறோம் தாய்நாட்டை விட்டு வெளியேறி அல்லலுற்றுமீண்டும் சொந்த நாட்டுக்கே திரும்பிவரும் லட்சக்கணக்கான மக்களின் பச்சாதாபக்கண்ணீரை இந்தியா கௌரவிக்குமென நம்புகிறோம்." என்று இந்திய பார்லிமெண்டில் இந்தியப்பிரதமர் பண்டித ஜவஹர்லால்நேரு அறிவித்தார். இரண்டு சமுதாயக்கொள்கை அர்த்தமற்ற வீண் கூச்சலென்று நடைமுறையில் நிரூபணமாய் விட்டதைக்குறித்து நாம் சந்தோஷப்படாமல் இருக்க முடியாது. ஆயினும் அதனால் ஏற்பட்ட நஷ்டத்திற்கு ஈடு செய்யவும் தேசம் இழந்துவிட்ட சக்தியை திரும்பப் பெறவும் பல வருஷங்கள் பாடுபட்டாகவேண்டும்.

# கடிதங்கள்.

## கம்பம்.

அன்புள்ள மௌலானா ஸாஹிப்,

இருள் சூழ்ந்துள்ள இவ்வேளையில் நம் சமூகத்துக்கு வெளிச்சத்தைக் காட்ட தங்களை ஆசிரியராகக்கொண்ட ‘ஆஸாத்’ என்னும் பத்திரிகையை சமய சஞ்சீவியென்றே கருதுகின்றேன். முஸ்லிம் லீகின் வகுப்புவாதப் போக்கால் முஸ்லிமைக் கண்டால் ஹிந்து சீற்றம் கொள்ளவும் ஒருவரை ஒருவர் பகைவர்களாய் நினைக்கும் இந் நாட்களில் தங்களின் ‘ஆஸாத்’ மூலம் வேற்றுமை நீங்கி ஒற்றுமை நிலவுமென்றும் நம்புகிறேன். ‘ஆஸாத்’ ஆண்டு விழா முதல் பொன் விழா வரையும் கொண்டாட அருள் புரியும்படி எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

கா. பீர்முஹம்மது ருவுத்தர்,
நகர காங்கிரஸ் கமிட்டி மெம்பர், கம்பம்.

ஃ ஃ ஃ ஃ

## காரைக்குடி.

20—4—43 செவ்வாய்க்கிழமை 10 மணிக்கு மாரியம்மன் கோவில் முன்பாக இந் நகர் உயர்தரப் பள்ளி தமிழ் போராசிரியர் க தேசிகன் அவர்கள் தலைமையில் “தேசிய வாரம்” கொண்டாடப்பட்டது. அவ்வமயம் கரு செல்லப்பெருமாள், மு. சின்னய்யா. சி. ராம. சின்னச்சாமி இம் மூவரும் தேசிய வாரத்தினுடைய தன்மையைப் பற்றி விரிவுரையாற்றிய பின் சி. ராமசாமி அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பெற்று கூட்டம் இனிது நிறைவெய்தியது.

ரா ம. ரெங்கசாமி,
காரியதரிசி
பாரத இளைஞர் சங்கம், செஞ்சை

ஃ ஃ ஃ ஃ

## காயல்பட்டணம்.

ஐக்கிய தொழிலாளர் சார்பில் 13—4—48-ல் நடந்த பொதுக்கூட்டத்துக்கு ஜனாப் M. K. காதர் தலைமை வகித்தார் ஸ்ரீ செல்வராஜ் தேசியக்கொடியேற்றிவைத்தார். தலைவர் பேசுகையில் சுதந்திரம் பெற ஊக்கமளித்த தேசிய வாரத்துக்கு, சுதந்திர இந்தியாவில் முக்கியத்துவம் குறைந்துவிடவில்லையென்றும் இனி சுதந்திரத்தைக் காப்பாற்றுவதற்கும் மகாத்மாவின் லட்சியம் வெற்றிபெறுவதற்கும் தேசியவாரம் கொண்டாடப்படுமென்றும் குறிப்பிட்டு விட்டு மேலும் அவர் “தொழிலாளர் சமூகத்தின் எழுச்சி முன்னேறிச் செல்ல மக்கள் உந்தப்படுவதையே குறிக்கின்றது. அதன் விளைவாக மனிதனை மனிதன் அடிமைகொள்ளும் கொடிய சமூக அமைப்பு தகர்ந்துவிடும். தொழிலாளி தேசத்தின் அச்சாணி. அவன் பாதிக்கப்பட்டால் சமூக அமைப்பே பாதிக்கப்படும். இனித் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை எந்த சக்தியும் புறக்கணித்துவிட முடியாது. மாறுதலை உணர்ந்து நடந்து கொள்ளத் தவறினால் சுரண்டுபவர்கள் மறைந்துபோக நேரிடும்.”

“நாடு விடுதலையடைந்து ஒருவருஷமும் ஆகவில்லை. நாடும் மக்களும் அனுபவித்த கொடுமைகளை எண்ணிப் பார்க்கவும் முடியாது. முடிவில் வகுப்புவாதம் மகாத்மாவையும் நம்மிடமிருந்து பிரித்துவிட்டது. அந்தக் கொடிய சக்தியை இந்தியாவின் எந்த மூலையிலும் ஒண்ட விடாமல் துரத்தியடிக்க வேண்டும்.”

“இங்கு ஹிந்து ஆட்சியோ, முஸ்லிம் ஆட்சியோ இல்லை வகுப்பு வாதிகளுக்கு இனி இங்கு இடமில்லை. சுதந்திரத்தைத் தேடித் தந்த காங்கிரஸ் மஹா சபை சர்க்காரை அமைத்து நடத்துகின்றது ஒருசில முதலாளிகளையும் சந்தர்ப்ப வாதிகளையும் பார்த்து பாட்டாளி மக்கள் பயப்பட வேண்டியதில்லை. இந்திய பார்லிமெண்ட் தயாரிக்கும் திட்டங்களும் நம் பிரதமர் பண்டித நேருவின் பிரசங்கங்களும் இதை நிரூபிக்கின்றன. ஜன நாயக சோஷியலிஸ்டு சமுதாயத்தை அமைப்பதே காங்கிரஸின் லட்சியம். அது படிப்படியாகத்தான் சாத்யம். சமுதாய அமைப்பை ஒரே யடியாக மாற்றுவதால் ஏற்படக்கூடிய விளைவுகளை அலட்சியம் செய்து விடுவதற்கில்லை. மக்களின் உணர்ச்சியும், தொழிலாளியின்சக்தியும், முதலாளிகள் போக்கும், தேசீய, சர்வதேசீய நிலைமையும் பண்டித நேருவுக்கு நன்றாகத் தெரியும். முழு சக்தியையும் நேரு சர்க்காருக்கு அளிப்பதும் உணர்ச்சிக்கும் சந்தர்ப்ப வாதிகளுக்கும் இலக்காகி விடாமலிருப்பதும் நம் கடமையாகும்.”

“தங்கள் உரிமைக்கு மட்டுமின்றி, தொழிலாளர்கள் தேச நலனுக்காகவும் பிரதானமாய் உழைக்க வேண்டும்”

பிறகு பேசிய ஸ்ரீ கோசல் ராம் M. L. A. சென்னை சர்க்கார் செய்துவரும் சேவையை எடுத்துரைத்தார். M. K. ஷம்சுதீன், செல்வராஜ், A. முஹம்மது ஹுசைன், சு. தங்கவேல், சிவனாண்டி பாரதி முதலியோரும் பேசினார்கள். சங்க காரியதரிசி வந்தனோபசாரத்துடன் கூட்டம் முடிந்தது.

# மஹ்மூது கஜ்னவி காட்டுமிராண்டியா?

மஹ்மூது கஜ்னவியை அறிமுகப்படுத்த வேண்டிய அவசியமேயில்லை. கொடுங்கோலன், கொள்ளைக்காரன், காட்டுமிராண்டி என்று சொன்னாலே போதும். இந்திய சரித்திரம் படித்திருப்பவர்கள் உடனே மஹ்மூது கஜ்னவியை நினைத்துக் கொள்ளுவார்கள்.

பதினோராவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் சோமநாத் முதல் சமர்கந்த் வரை பிரமிக்கச் செய்து பிரசித்திப் பெற்று விளங்கிய ஒரு சுல்தானைப் பற்றி இந்திய சரித்திரத்திற்கு அதைவிட அதிகமாய் ஒன்றும் தெரியாது. பேனாவில் கருப்புமையைத் தொட்டு எழுத ஆரம்பிக்கும் சரித்திர ஆசிரியனுடைய உள்ளத்தை துவேஷம் என்னும் அழுக்கு தொடாமலிருக்க வேண்டிய தவசியம். இல்லையேல் சரித்திரமே இழுக்காகி விடுமென்பதில் சந்தேகமேயில்லை.

காட்டு மிராண்டி என்று இந்திய சரித்திரம் அறிமுகப் படுத்தும் ஒரு சுல்தானின் வாழ்க்கையை பாரபட்சமற்ற முறையில் துருவிப் பார்க்கும்போது அவனுடைய காட்டுமிராண்டித் தனத்திலும் பாராட்டுதற்கரிய பல உயரிய அம்சங்கள் இருக்கத்தான் செய்தன என்பது விளங்கும். எட்வர்ட் கிப்பன் எழுதியிருக்கும் மஹ்மூதுகஜ்னவியைப் பற்றிய கீழ் வரும் சம்பவம் இதை நிரூபிக்கின்றது.

ஒரு நாள் சுல்தானை தனிமையில் ஒருவன் சந்தித்தான். சுல்தானுடைய சேனையைச் சேர்ந்த முக்கிய அதிகாரி ஒருவன் தன்னுடைய மனைவியுடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் இரவு வேளைகளில் வரப்போக இருப்பதாகவும், அந்த மனிதன் முறையிட்டான். இனியொரு தடவை அவன் வரும் சமயம் பார்த்து உடனே வந்து தனக்குத் தகவல் கொடுக்கும்படி அவனுக்குச் சொல்லியனுப்பி விட்டு, முறையிட்ட மனிதன் எந்த நேரத்தில் வந்தாலும் தன்னிடம் கொண்டு வரும்படியாக பணியாட்களுக்கும் மஹ்மூது உத்திரவிட்டான்.

மூன்றாம் நாள் இரவு திரும்பவும் அந்த மனிதன் வந்தான். உடனே சுல்தான் மாளிகையை விட்டு புறப்பட்டு அவனுடன் நடந்தான். இரவு பாதிக்குமேல் கழிந்து போயிருந்தது. வீட்டை யடைந்த போது விழித்துக் கொண்டிருந்த விளக் கொளியில் விபசாரிகள் கட்டில்மீது அயர்ந்து தூங்கிக் கொண்டிருப்பதை சுல்தான் பார்த்தான்.

"விளக்கை அணைத்து விடு" என்றான் மஹ்மூது இருட்டில் அவனுடைய வாள் மின்னலைப் போல் பிரகாசித்தது. ஒரே வீச்சில் இரண்டு தலைகள் உருண்டு ஓடின. பிறகு விளக்கேற்றி வெட்டப் பட்ட தலைகளைப் பார்த்தவுடன் சுல்தான் ஆண்டவனுக்கு ஸிஜ்தா (நன்றி செலுத்துவது) செய்தான். வீட்டுக்காரனை ஜலம் கொண்டு வரச்சொல்லி வாங்கிக் குடித்து விட்டு புறப்பட்டான்.

"ஹுஸூர் முதலிய விளக்கை யணைக்கச் சொன்னீர்கள். பிறகு ஆண்டவனுக்கு நன்றிச் செலுத்தினீர்கள். கடைசியில் ஜலமருந்தினீர்கள். இதன் கருத்து என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை." என்று அம் மனிதன் கேட்டான்.

"என்னுடைய ஆட்சி முறையில் நாட்டில் எவரும் அக்ரமம் செய்ய முடியாதென நான் நம்பியிருந்தேன். அப்படி யாராவது அக்ரமம் செய்தால் என்னுடைய மகனைத்தவிர வேறு யாருக்கும் அவ்வித துணிச்சல் இருக்க முடியாதென எண்ணி அவனை தண்டிப்பதற்க்காகவே இங்கு வந்தேன். மானிட பலஹீனம், தகப்பனின் வாஞ்சை, நியாயம் வழங்குவதிலிருந்து என்னை மறுதளிக்க செய்து விடுமோ என அஞ்சி விளக்கை அணைக்கச்சொன்னேன். என்னுடைய மகனைக் கொல்வதாகவே நினைத்து வாள் வீசினேன். என்னுடைய மகன் அல்லவென்று தெரிந்தவுடன் என்னுடைய மகனின் உயிரையும், ஒழுக்கத்தையும் காப்பாற்றிய ஆண்டவனுக்கு நன்றி செலுத்தினேன். என்னிடம் வந்து நீ முறையிட்ட பிறகு நியாயம் வழங்கப்படாத வரையில் ஒன்றும் சாப்பிடுவதில்லை யென்று ஆண்டவனறிய சபதம் செய்திருந்தேன். நியாயம் வழங்கியாயிற்று. விரதத்தை முடித்துக் கொள்ள ஜலம் அருந்தினேன்." என்று பதிலளித்தார்.

மஹ்மூது கஜ்னவியின் காட்டுமிராண்டித்தனத்துக்கு எட்வர்ட் கிப்பன் கொடுக்கும் மேற்கூறிய சம்பவம் ஒன்றே போதும். ஆனால் காட்டுமிராண்டித்தனம், கொடுங்கோன்மை இதுவேயானால் நீதி, நியாயம் என்று எதைச் சொல்லுவதென்பதுதான் புரியவில்லை.

அரசியல் அறிவு வளர்ச்சி அடைய
"ஆஸாத்"
அவசியம் படிக்கவேண்டும்.

# பந்தோபஸ்து சபை தீர்ப்பா? சூழ்ச்சியா?

உலக சமாதான ஜனநாயக காவலாளிகள், நான்கு மாத சூழ்ச்சிகளுக்குப் பிறகு வாதியை குற்றவாளியாக்கி, குற்றவாளியை வாதியாக மாற்றி, உண்மையான குற்றவாளிக்கு சாதகமாக டிகிரிசெய்திருக்கின்றனர். பந்தோபஸ்து சபையின் தீர்மானத்தை இந்தியப் பிரதிநிதி புத்திசாலித்தனமாக நிராகரித்திருக்கிறார். காஷ்மீர் பிரச்னையை பந்தோபஸ்து சபையிடம் சமர்ப்பிககாமலேயே இருந்திருந்தால் இன்னும் புத்திசாலித்தனமாக இருந்திருக்கும். இந்தியாமீது படையெடுத்த படையெடுப்பாளர்களுக்கு உதவிசெய்து சர்வதேச சட்டத்தை மீறிய பாகிஸ்தான்செய்கையை உலகுக்கு எடுத்துக் காட்டியதுடன் இந்தியா நிறுத்திக்கொண்டிருக்கவேண்டும். நியாயம், ஜனநாயகம் பந்தோபஸ்துசபையிடம் எதிர்பார்த்திருக்கக்கூடாது. ஆயினும் நடந்துவிட்டதைக்குறித்து வருந்திக்கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை. இந்தியாவின் நிலைமை மிகத்தெளிவானது. சமாதானத்தைக் காக்க இந்தியா பந்தோபஸ்து சபையிடம் அணுகிற்று. அதை அலட்சியம் செய்ததுடன் பந்தோபஸ்து சபை தவறான வழியையும் மேற்கொண்டிருக்கின்றது. எனவே சபையின் முடிவை இந்தியா ஏற்கமுடியாது. வாதியே தாவாவை வாபஸ் பெற்றுக்கொண்டபிறகு நடவடிக்கையெடுக்க சபைக்கு அதிகாரமிருப்பதற்கில்லை. இருப்பினும் பந்தோபஸ்துசபைக்கமிஷன்காஷ்மீருக்கு விஜயம்செய்து நிலைமையை நேரில் கண்டறிவதை அனுமதிக்கலாம். ஆனால் சபையின் தீர்மானம் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை இந்தியா நிராகரித்து இருக்கின்றது. ஆகையால் காஷ்மீரிலிருந்துஇந்தியா துருப்புகளை வாபஸ் பெறுவதும், அப்துல்லா சர்க்காரில் எவ்வித மாறுதலை செய்வதும், முடியாத காரியமாகும். இல்லையேல் காஷ்மீர் பாகிஸ்தானிடம் ஒப்படைக்கப்படுவதைத் தவிர அதனால் வேறு பலன் ஒன்றும் ஏற்பட முடியாது. மேற்கூறிய இரண்டு யோஜனைகளையும் இந்தியா நிராகரித்திருப்பது திருப்தி அளிக்கக்கூடிய விஷயமாகும். ரெபரண்டம் எடுத்து முடிவு செய்யப்படாதவரை காஷ்மீரை பாதுகாக்க வேண்டிய பொருப்பு இந்தியாவுக்கு இருந்துவரும் என்று ஸ்ரீ அய்யங்கார் அழுத்தந்திருத்தமாக எடுத்துச் சொல்லியிருப்பது குறிப்பிடத்தகுந்ததாகும். பந்தோபஸ்து சபை என்னதான் செய்தாலும் படையெடுப்பாளரை வெளியேற்றும் வேலையில் இந்தியத்துருப்புக்கள் தீவிரமாய் முனைந்தே யிருக்கும் என்பதுதான் அதற்கு அர்த்தம். இனி எவ்வித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தீர்மானிக்கவேண்டியது இந்திய சர்க்காரின் வேலை. பந்தோபஸ்து சபை நான்கு மாதங்களில் ஆக்ரமிப்பாளருக்கு எதிராக ஒன்றும் செய்ய முடியவில்லை என்பதற்காக இந்தியாவும் தன்னுடைய கடமைகளை தட்டிக்கழித்துவிட முடியாது. இந்திய யூனியனில் சேரும்பொழுது காஷ்மீருக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை எல்லாம் பூர்த்தி செய்ய இந்தியா கடமைப்பட்டிருக்கின்றது. பந்தோபஸ்து சபையில் தனக்கு வெற்றி கிடைத்துவிட்டது என்று பாகிஸ்தான் நினைக்கலாம். அப்படி நினைப்பது பைத்தியக்காரத்தனம். உண்மையில் லேக்ஸக்ஸஸில் சூழ்ச்சிக்குததான் வெறறி கிடைத்திருக்கிறது. பந்தோபஸ்து சபையில் இதுவரையில் எல்லா பிரச்னைகளிலும் சூழ்ச்சியே வெற்றியடைந்தும் வந்திருக்கிறது. காஷ்மீர் பிரச்னையில் தீர்ப்புச் செய்து பந்தோபஸ்துசபை மேலும் தனக்கு கெட்ட பெயரை தேடிக்கொண்டிருப்பதுடன் நம்பிக்கையும் இழந்துவிட்டது. நம்பிக்கையே அதன் அடிப்படைலட்சியம். அதை இழப்பது காலஞ்சென்ற 'லீக் ஆப் நேஷன்ஸ்' அடைந்த கதிக்கு அழைப்பு அனுப்புவதாகும். இந்தியா விஷயததில் பந்தோபஸ்து சபை நம்பிக்கைத் துரோகம் செய்திருப்பினும் அதை ஒன்றுமில்லாமல் செய்வது இந்தியாவின் கையிலிருக்கிறது. பந்தோபஸ்து சபை நடவடிக்கையுடன் ஒத்துழைக்காமல் நியாயத்தையும் ஜனநாயகத்தையும் ஆதரித்து நிற்பதன் மூலம் சூழ்ச்சியின் வெற்றியை தோல்வியாக மாற்ற இந்தியாவால் முடியும். முடிவில் நியாயமே வெற்றியடையும் என்பது நிச்சயம். பந்தோபஸ்து சபையின் தீர்மானம் பேப்பர் நடவடிக்கையைத் தவிர வேறொன்றும் இல்லை. தங்களுடைய முடிவை யார்மீதும் திணிப்பது தங்கள் நோக்கமல்லவென்று ஆரம்பத்திலேயே சபையின் அங்கத்தினர்கள் சொல்லியிருக்கின்றனர். அவர்கள செய்யப்போகும் தவறானமுடிவு அவர்களுக்கு ஆரம்பத்திலிருந்து தெரிந்தேயிருக்கவேண்டும் ஆகையால்தான் "இந்தியா நியாயம், ஜனநாயகத்தை ஆதரித்து பந்தோபஸ்து சபையின் முடிவை நிராகரித்துவிடும் என்று நாம் நினைக்கவில்லை" யென்று சபை அங்கத்தினர்கள் முன்கூட்டியே வெளியிட்டிருந்தனர். யுத்த அபாயததைத் தவிர்க்க நியாயத்தையும், ஜனநாயகத்தையும் இந்தியா விட்டுக்கொடுத்துவிட முடியாது. இந்தியாவின் வழியில் வல்லரசுகளின் ஆதிக்க ஆசை முட்டுக்கட்டை போட்டுவருகின்றது. ரஷ்ய எதிர்ப்பு கோஷ்டியில் இந்தியா சேரவேண்டுமென அமெரிக்கா விரும்புகின்றது. இன்னொருபுறம் இந்தியாவை சாம்ராஜ்யத்தின் அங்கமாகவே

# துரோகிகளா முஸ்லிம்கள்?

பிரிவினைக்குப்பிறகு அடைந்த மனக்கஷ்டத்தை விட ஆயிரமடங்கு அதிகமாக இந்திய முஸல்மான்கள் காஸிம் ரஜ்வியின் பேச்சால் மனவேதனை யடைந்திருக்கின்றனர். ஹைதராபாத் சரித்திரத்திற்கு காஸிம் ரஸ்வியின் பேச்சு பொருந்தலாம். முஸல்மான்களின் கண்ணியமான சரித்திரத்திற்கு எவ்விதத்திலும் பொருந்தாது. ஸ்பெயின் முதல் சைனு வரையில் உள்ள பாதி உலகம் முஸ்லிம் ஆட்சியின் கீழ் இருந்த காலமும் ஒன்று உண்டு. முஸ்லிம் அரசர்கள் தாங்கள் ஆண்ட தேசத்தையே சேர்ந்தவர்கள் என்று தங்களை நினைத்தார்களே ஒழிய வெளியிலிருந்து வந்தவர்களைப் போல் எங்குமே நடந்துக் கொண்டதில்லை. முஸ்லிம் அல்லாதாருக்கு அளித்த வாக்குறுதிகளைக் காப்பாற்றுவதற்காக முஸ்லிம்களையும் எதிர்த்து வீரப்போர் புரிந்து முறியடித்த, உயிர்நீத்த ஏராளமான முஸ்லிம்களின் பெயர்கள் சரித்திரத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. இந்தியா இந்திய முஸல்மான்களின் தாயகம் பிரிவினைக்குபபிறகு பாகிஸ்தானுக்கு சென்றுவிட்ட முஸ்லிம்களும் இந்தியாவுக்கு துரோகம் செய்ததாக யாரும் சொல்ல முடியாது. அதற்கு மாறாக பாகிஸ்தான் மோகம் உள்ளத்தில் குடிகொண்டிருக்க அவர்கள் இந்தியாவிலேயே இருந்து வந்திருந்தால் தேசத்தின் துரோகிகளாகவே இருந்திருப்பர். இன்று இந்தியாவிலிருக்கும் நாலரைகோடி முஸ்லிம்களை பாகிஸ்தானுக்குப் போகாமலிருக்கும்படி ஒருவரும் நிர்ப்பந்திக்கவில்லை. பன்னிரெண்டு நூற்றாண்டுகளாக தங்கள் மூதாதையர் தலைமுறை தலைமுறையாய் வாழ்ந்து வந்த இந்த நாடு தங்களுடைய தாய்நாடு என்று மனப்பூர்வமாய் நினைத்துக் கொண்டிருக்கும் முஸ்லிம்கள் இஷ்டப்பூர்வமாகவே இங்கு இருந்து வருகின்றனர். இந்நிலையில் சமயம் வரும்போது இந்திய முஸல்மான்கள் தங்கள் தாய் நாட்டிற்கு எதிராக நடந்துக் கொள்வார்கள் என்று காஸிம் ரஜ்வி வாய் விட்டுச் சொன்னதை சுயமரியாதை உள்ள எந்த ஒரு முஸ்லிமும் சகிக்க முடியாது. நாலரை கோடி இந்திய முஸல்மான்களுக்கு மட்டுமின்றி முஸல்மான்களின் கம்பீரமான சரித்திரத்துக்கே காஸிம் ரஜ்வி தீங்கிழைத்திருக்கின்றார். முஸல்மான்கள் அளித்த வாக்குறுதிகளை மீறுபவர்களல்ல. தாய் நாட்டுக்கு துரோகம் செய்த களங்கம் முஸ்லிம் சரித்திரத்தில் இல்லை. இந்திய முஸல்மான்கள் இந்தியாவிடம் பரிபூரண விசுவாசம் இருப்பதாக உறுதியளித்திருக்கின்றனர். மேலும் இந்தியா இந்திய முஸல்மான்களின் தாயகம். ஜனநாயக குடியரசு. இங்கு மற்றவர்களுக்குள்ள உரிமைகள் முஸ்லிம்களுக்கும் உண்டு. எனவே தங்கள் நாட்டுக்கு அளித்த வாக்குறுதிகளையும் மீறி தாய் நாட்டுக்கு துரோகம் செய்வரென்று சொல்லி இந்திய முஸல்மான்களை காஸிம் ரஜ்வி இழிவுபடுத்தியிருக்கிறார். பாகிஸ்தானுக்குப் போவதா? இல்லையா? என்று தீர்மானிக்க முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கும் ஒருசில முஸ்லிம்கள் இன்னும் இந்தியாவில் இருக்கலாம். அந்த இரண்டும் கெட்ட பேர்வழிகளால் ஆவது ஒன்றுமில்லை. அவர்களை நம்பி யிருந்தால் காஸிம் ரஜ்வியின் கதி அதோகதிதான். ஒரு ரஜ்வியையோ, நிஜாமையோ அதிகாரத்தில் அமர்த்த நாலரைக் கோடி முஸ்லிம்கள் தங்களுக்கே வெடி வைத்துக் கொள்ளுவார்கள் என்று நம்புவதைவிட பெரிய முட்டாள்தனம் வேறுஒன்று மிருப்பதற்கில்லை நாலரை கோடி முஸ்லிம்களை ஐந்தாம் படையினரென்று வாய் கூசாமல் சொல்லும் நபரையும் பொருப்பற்ற விதமாய் பிதற்றி நாலரைக் கோடி முஸ்லிம்களின் கௌரவத்தை தாக்கிய நபரை விட்டு வைத்திருக்கும் நிஜாம் சர்க்காரை இந்திய முஸல்மான்கள் சும்மா விடப் போவதில்லை. காஸிம் ரஜ்வியின் பேச்சை தங்கள் மரியாதைக்கு விடுக்கப்பட்ட சவாலாக ஏற்று சமயம் வரும்பொழுது இந்திய முஸல்மான்கள் ஹைதராபாத் பாஸிஸ்டுகளுக்கு சரியான பாடத்தை கற்பிக்கப் போகின்றார்கள் என்பது நிச்சயம்.

---

வைத்திருக்கவேண்டுமென பிரிட்டன் விரும்புகின்றது. பாகிஸ்தான் சம்மந்தப்பட்டவரை பிரிட்டன் அமெரிக்காவுக்கு எவ்விதசந்தேகமும் இல்லை. இந்தியத் தலைவர்கள் எந்தக் கோஷ்டியிலும் சேராமலிருக்கப் போவதாக அடிக்கடி சொல்லி வருவதிலிருந்து இந்தியாவின் நிலைமை சந்தேகிக்கப்படுகின்றது. மற்றவர்கள் மூட்டிய தீயில் இந்தியா குதிக்கத் தயாராய் இருக்கமுடியாதென்பது வெளிப்படை. ஆயினும் பிரிட்டனுடனோ அமெரிக்காவுடனோ பகை என்பது அதன் அர்த்தமல்ல. பல விஷயங்களில் பிரிட்டன் அமெரிக்காவுடன் இந்தியா ஒத்துழைக்கலாம். பல துறைகளில் அவர்களுடைய உதவியும் நமக்கு வேண்டியிருக்கும். பிரிட்டன் அமெரிக்கா நியாயத்தையும் ஜனநாயகத்தையும் ஆதரித்து சர்வதேசிய பிரச்னைகளில் நடுநிலைமை வகித்தால் மட்டுமே அவ்வித ஒத்துழைப்பு சாத்தியமாகும். காஷ்மீர் விஷயத்தில் இரண்டு நாடுகளும் அதை மீறியிருக்கின்றன. இந்தியாவின் ஒத்துழைப்பு வேண்டியிருந்தால் பிரிட்டனும் அமெரிக்காவும் காஷ்மீர் விஷயததில் செய்திருக்கும் அநியாயத்தை ரத்து செய்வதன் மூலம் தங்கள் நல்ல எண்ணத்தை [illegible]

# பாகிஸ்தானில் அகதிகள் துர்கதி

## பாக் பத்திரிகைகளின் கண்டனம்

பல நூற்றுண்டுகளாக தலைமுறை தலைமுறையாய் வாழ்ந்து வந்த தாய் நாட்டை விட்டு பாகிஸ்தானுக்குச் சென்றவர்கள் அங்கு நடத்தப்படும் விதத்தை இங்குள்ள பாகிஸ்தான் அனுதாபிகள் தெரிந்துகொண்டாவது திருந்தட்டுமென்பதே நம் நோக்கம். நான்கு பாகிஸ்தான் முஸ்லிம் பத்திரிகைகள் வெளியிட்டிருக்கும் அபிப்பிராயத்தைக் கீழே தருகிறோம். — ஆசிரியர்.

லாகூர் முஸ்லிம் பத்திரிகையான 'நிஜாம்' கீழ் வருமாறு எழுதுகின்றது. "அமைதியற்ற நிலைமையில் இந்தியாவிலிருந்து 'ஹிஜாத்' செய்து பாகிஸ்தானுக்கு வந்த முஸ்லிம்களில் பெரும்பான்மையோர் வேறு வழியின்றி இந்தியாவுக்கே திரும்பி சென்றுகொண்டிருக்கின்றனர் என்று செய்திகள் கிடைத்து வருகின்றன சரியாகவோ, தப்பாகவோ அநேக நம்பிக்கைகள் வைத்திருந்த பாகிஸ்தான் பூமியிலும் அவர்களுக்கு அடைக்கலம் புக இடம் கிடைக்க முடியவில்லை தங்கள் ரத்தத்தினால் நிர்மாணித்த சொர்க்கத்திலிருந்து மீண்டும் அநேக அகதிகள் நரகத்திற்கே திரும்பிக் கொண்டிருக்கின்றனர். பல நூற்றுண்டுகளாக கௌரவமான வாழ்க்கை நடத்தி வந்த ஆத்மீக வாழ்க்கையுடன் பிணைக்கப்பட்டிருந்த தங்கள் தாய்நாட்டைவிட்டு லட்சக்கணக்கான முஸ்லிம்கள் வெளியேறியது வருந்தத்தக்க விஷயமேயாகும். ஆயினும் அதைவிட பரிதபிக்கத்தக்க, படிப்பினைக்குரிய விஷயம் அவர்கள் தங்கள் நாட்டிற்கு திரும்பிச் செல்வதாகும். பாகிஸ்தான் அரசாங்கத்திற்கு இதைவிட வெட்கப்படத்தகுந்த விஷயம் வேறெதுவும் இருக்கமுடியாது. பாகிஸ்தான் அதை உணராமல் கண்களை மூடிக்கொண்டிருந்தால் அது முற்றிலும் வேறு விஷயம். பாகிஸ்தானுக்கு வந்த பிறகும் அகதிகளுக்கு நிம்மதி கிடைக்கவில்லை. தெருத் தெருவாய் அலைந்துகொண்டிருக்கின்றனர். முயற்சியும் தியாகங்களும் பலனில்லாமல் வீணாய்விட்டன என்றே சொல்லவேண்டும். இன்னொரு புறம் ஏராளமான முஸ்லிம்கள் நாடோடிகளாய் அலைந்துகொண்டிருப்பது மட்டுமின்றி இந்தியாவுக்குத் திரும்பிச் சென்றுகொண்டிருப்பதையும் பார்க்கின்றோம். இந்த இரண்டையும் சேர்த்துப் பார்க்கையில் ஏற்படும் முடிவு மிகத் தெளிவானது. அதை உணரும்பொழுது நம் மனம் வேதனையடைகின்றது. நம்மால் நம்பவும் கூடவில்லை"

### கராச்சி 'அஞ்சாம்'

"அகதிகள் இந்தியா திரும்பி செல்வதைக்குறித்து பாகிஸ்தான் பிரதம மந்திரி மிஸ்டர் லியாகத் அலிகானிடம் தான் குறை கூறியதாக 'டைம்ஸ் ஆப் இந்தியா' (பம்பாய்) வெளியிட்டதை பாகிஸ்தான் முஸ்லிம் லீக் தலைவர் சௌத்ரி கலி குஸ்ஸமான் மறுத்தார். ஆயினும் நாம் 'டைம்ஸ் ஆப் இந்தியா'வுக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றோம். 'டைம்ஸ் ஆப் இந்தியா'வின் தவறுன செய்தியால் பல ருசிகரமான விஷயங்கள் வெளிவருவது சாத்தியமாயிற்று. பாகிஸ்தான் அரசாங்கமும், பொறுப்பு வாய்ந்தவர்களும் முஹாஜிரின் அனுபவிக்கும் துன்பங்களைக் குறித்து கொஞ்சமும் கவலைப்படாலிருக்கின்றனர் என்று நாம் நினைத்திருக்கவில்லை. முஹாஜிரின் பாகிஸ்தானில் இருக்கின்றார்களா? திரும்பிச் செல்லுகின்றார்களா? என்ற விஷயத்தில் சௌத்ரி கலி குஸ்ஸமான், அல்லாமா ஷப்பீர் அஹமத் உஸ்மானி இருவரைத்தவிர (இருவரும் முஹாஜிரின்கள்) இங்குள்ளவர்களில் ஒருவரும் அதைக்குறித்துக் கவலைப்படுவது ஒருபுறமிருக்க அபிப்பிராயமும் வெளியிடவில்லை"

"இது மிகவும் வருந்தத்தக்க விஷயம். முஹாஜிரின்கள் தொடர்ந்து திரும்பிப் போய்க்கொண்டேயிருந்தால் அந்நிய நாடுகளில் பாகிஸ்தான் கௌரவம் இழந்துவிடும். பாகிஸ்தான் இந்திய முஸல்மான்களின் தாயகம் என்பதை உலகத்தில் ஒவ்வொரு மனிதனும் அறிந்திருக்கிறான். முஹாஜிரின் திரும்பிச்செல்வதால் தங்கள் சமூகத்தினருக்கு அளித்திருந்த வாக்குறுதிகளை பாகிஸ்தான் கர்த்தாக்கள் மறந்துவிட்டனர் என்றே ஏற்படும். எனவே மைனாரிடி முஸ்லிம்களுக்கு அளித்திருந்த உறுதிமொழிகளை காப்பாற்றுவார்கள் என்று நாம் அவர்களிடம் எதிர்பார்க்கமுடியும்"

"அகதிகள் திரும்பிவருவதை இந்தியா அரசியல் துறையில் பிரயோஜனப் படுத்திக்கொள்ளப் பார்க்கிறது. பாகிஸ்தானிலுள்ள இந்திய உதவி ஹை கமிஷனரும் பண்டித நேருவும் வெளியிடும் அறிக்கைகளே போதிய சாட்சியாகும்.

அனுதாபமில்லாவிடினும் அரசியல் காரணங்களுக்காகவாவது முஹாஜிரின் திரும்பிச்செல்லாம

விருக்க பாகிஸ்தான் அரசாங்கம் முயற்சிசெய்யுமென்றும் அவர்கள் திரும்பிச் செல்வதற்கு காரணமாக இருக்கும் குறைகளை நிவர்த்தி செய்யுமென நம்புகிறோம். அவர்களுக்கு இருந்துவரும் குறைகள் எல்லோருக்கும் தெரியும். மாகாண உணர்ச்சி, பிழைக்க வழியின்மை, உத்தியோகம் கிடைப்பதிலுள்ள கஷ்டம், சர்க்காரின் அசிரத்தை இவைகள் போக்கப்பட்டால் முஹாஜிரின் பாகிஸ்தானைவிட்டு திரும்பவும் நரகத்துக்கே செல்லக் காரணமில்லை. அங்கு அவர்களுக்கு இடமில்லை. இருக்கவும் முடியாது.

### ‘ஜங்க்’ கராச்சி.

“கைர்பூர் சமஸ்தானத்துக்குள் முஹாஜிரின் நுழைய அனுமதியில்லை என்று தெரிகிறது தப்பித் தவறி யாராவது நுழைந்துவிட்டால், அமைதியின் பெயரால் உடனே சமஸ்தான அதிகாரிகள் வெளியேற்றிவிடுகின்றனர் இதெல்லாம் ஏன்? அங்குள்ள அதிகாரிகள் பாகிஸ்தான் கொள்கைக்கு மாறுபட்டவர்களா? இதர சமஸ்தானங்கள் முஹாஜிரின்களைக் குடியேற்றும் பொருப்பு ஏற்றுக்கொண்டிருக்கையில் அந்த சமஸ்தான யதேச்சாதிக்கார அதிகார வர்க்கத்துக்கு எதிராக கைர்பூர் நவாபின் கவனம் திருப்பப்படவேண்டும் அதனால் முஹாஜிரின்களுக்கும் சௌகரியமாயிருக்கும்; பாகிஸ்தானுக்கும் சுமை குறையலாம்”

“பாகிஸ்தான் நிலையற்ற நிலைமையில் போய்க்கொண்டிருக்கின்றது என்று நினைக்கிறோம். ஒரு சமயம் அகதிகள் அலட்சியம் செய்யப்படுகின்றனர். இன்னொரு சமயம் அவர்கள்மீது கருணை காட்டப்படுகின்றது. சிந்துபிரதமர் குர்ரோ 5,000 முஹாஜிரின்களை ஏற்றுக்கொள்ளப்போவதாக சமீபத்தில் அறிவித்தார். ஆனால் சிந்து போலீசாருக்கும், அதிகாரிகளுக்கும் முதலில் தன்னுடைய உணர்ச்சிகளை அறிவிக்குமாறு பிரதமர் குர்ரோவை நாம் கேட்டுக்கொள்கிறோம். இல்லையேல் ஏழை முஹாஜிரின்கள் சாகாமல் செத்துப்போக நேரிடும்.”

“மீர்பூர் ஜில்லாவாசிகள் முஹாஜிரின்களை துன்புறுத்துவதாகவும், ரேஷன் கொடுப்பதில்லை என்றும், தாக்கப்படுகின்றனரென்றும், கொலை கொள்ளைகள் நடப்பதாகவும்; அகதிகள் போலீஸ் உதவியை நாடிச் சென்றால் எல்லா தாணக்களிலும் கல்தா கொடுத்துத் தள்ளப்படுகின்றனரென்றும் செய்திகள் கிடைக்கின்றன. அம்மாதிரியான அதிகாரிகளை சரிவர கவனிக்கும்படியாக பிரதமர் குர்ரோவைக் கேட்டுக் கொள்கிறோம்”

### ‘எஹ்ஸான்’ லாகூர்

“சிந்துவிலிருந்து ஏராளமான முஹாஜிரின்கள் நிர்ப்பந்த நிலைமையில் திரும்பிச் செல்லுவதாகத் தெரிகிறது “இந்திய முஸ்லிம்களுக்கு அவர்கள் மூதாதையர் நாட்டில் இடம் கிடைத்துவிட்டால் அது சந்தோஷப்படவேண்டிய விஷயமேயாகும். ஆயினும் ஆயிரம் விதமான நம்பிக்கைகளுடன் பாகிஸ்தானுக்கு வந்த முஹாஜிரின் உடைந்த உள்ளத்துடன் அவநம்பிக்கை அடைந்து இந்தியா திரும்பிப்போவது சிந்து அரசாங்கத்திற்கு அளவற்ற வெட்கமாகும்” என்று ‘டான்’ பத்திரிகை எழுதுகிறது.”

“‘டான்’ ஆசிரியர் அபிப்பிராயத்தை நாம் ஒப்புக்கொள்கிறோம் எனினும் சிந்து சர்க்காரிடம் மட்டுமின்றி முஹாஜிரின்கள் மீதும் குற்றமிருக்கிறது. என்பதே நம் அபிப்பிராயம். புதிய சூழ்நிலைக்கேற்றவாறு அவர்கள் நடந்துகொள்ள முயற்சிக்கவில்லை நாகரீகம், வாழ்க்கை முறை பொருத்தவரை சிந்து மாகாணம் பம்பாய், யு. பி, முதலிய மாகாணங்களுக்கு முற்றிலும் மாறுபட்டதாகும் ஆகையால் புதிதாக வந்தவர்கள் தங்களுக்குள் மாறுதல் ஏற்படுத்திக் கொண்டிருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் சிந்தியர்களின் விருந்தினராக முடியும். இல்லையேல் சிந்துவில் என்றுமே புதியதொரு சிறுபான்மையாகவே அவர்கள் ஆகிவிடுவர். முஹாஜிரின்களால் இவ்வித அவசியம் உணரப்படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கத்தான் வேண்டியிருக்கிறது.”

பஞ்சாபிலும் அதையே பார்க்கிறோம். கிழக்கு பஞ்சாப் வாசிகளான பஞ்சாபிகள் தங்களை புதிய அச்சில் வார்க்கவேண்டிய அவசியமில்லை. இருந்தும் தாங்கள் விட்டுவந்த கிழக்கு பஞ்சாபின் பூகோள அமைப்பு, இயற்கையால் இருந்துவந்த சூழ்நிலையைப் போலவே இங்கும் ஏற்படுத்த விரும்புகின்றனர். டில்லி யு பி. முஹாஜிரின் பஞ்சாபுக்கு முற்றிலும் மாறுபட்ட வாழ்க்கைத்தரம் கொண்டவர்கள். ஆகையால் பஞ்சாபின் வரவேற்பை அவர்கள் மதிப்பதில்லை. அன்னியோன்னியமும் பரந்த மனோபாவமும் பஞ்சாபிகளுக்குமட்டும் இல்லாமலிருந்திருந்தால் சிந்துவில் நடப்பதே இங்கும் நடந்திருக்கும்”

“சிந்துவைப் போன்ற மாகாணங்களிலிருந்து மாகாண வேற்றுமையைப் போக்கியாக வேண்டும். முஹாஜிரின்களும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு நடந்து கொள்ளவேண்டும். குறிப்பாக பாஷா விற்பன்னர்கள் என்று பெருமையடித்துக்கொள்வதை விட்டு கடந்த கால நினைவுகளை மறந்து எதிர்காலத்தில் கவனம் செலுத்தி வாழக் கற்றுக்கொள்ளும்படி முஹாஜிரின்களுக்கு யோசனை கூறுகிறோம். முஹாஜிரின்களை குடியேற்றுவதால் சர்க்கார், பிரதேச மக்கள், அகதிகள் மூவருக்கும் கடமைகள் உண்டு. ஒவ்வொருவரும் தங்கள் கடமைகளை உணராதவரை நல்ல பலன் காணுவது சாத்தியமில்லை.

சென்ற வாரத் தொடர்ச்சி.

# —: புனர் வாழ்க்கை. :—

(o)

## நம் அரசியல் போக்கு.

தனித் தொகுதியைப் புகுத்துவதில் பிரிட்டிஷாருக்கு கிடைத்த வெற்றி, இந்தியாவுக்குப் பிடித்த பீடையாகும் தனித்தொகுதி கேட்டவர்கள் முஸ்லிம்களே ஆயினும் முஸ்லிம் வகுப்புவாத பிற்போக்காளர்களுக்கு ஏகாதிபத்தியம் ஊக்கமளித்து வந்ததே அதற்குக் காரணம். அதனால் ஐக்கிய சமுதாய உணர்ச்சி மங்கி, இந்தியர்களிடையே ஏற்பட்ட பிளவு போக்க முடியாமலேயே போய்விட்டது. அதன் பலன் முடிவில் பாகிஸ்தான் ரூபத்தில் காட்சியளிக்கின்றது. லட்சக் கணக்கில் மக்கள் கொல்லப் படுவதற்கும், அலங்கோல நிலையில் அலைவதற்கும் தனித்தொகுதி ஒன்றுதான் காரணம்.

தேசீய முஸ்லிம்கள், நாற்பது வருஷங்களுக்கு முன்பே, அதை எதிர்த்தனர் தனித்தொகுதியால், வகுப்பு துவேஷம் வளர்ந்து, கலவரங்கள் மூளக்கூடுமென்றும் பிற்போக்குத் துறையில் முஸ்லிம்கள் இழுத்துச் செல்லப்படுவர் என்றும், முஸ்லிம்களுக்கு அதனால் தீமையே ஏற்படுமென்றும், முஸ்லிம்களின் உரிமைகளைப் பாதுகாக்க எவ்விதத்திலும தனித் தொகுதியால் முடியாதென்றும் எச்சரித்தனர். ஆயினும், வகுப்பு வேற்றுமைப்புயலில் சிக்கிவிட்ட முஸ்லிம்கள் அவர்களுடைய எச்சரிக்கையை அலட்சியம் செய்தது மட்டுமின்றி, இஸ்லாமிய துரோகிகளென்றும், சமூகத்தைக் காட்டிக்கொடுப்பவர்கள் என்றும் தூற்றினார்கள்.

தனித்தொகுதி கோரிக்கை ஒப்புக்கொள்ளப் பட்டு, ஏற்கெனவே, அமைந்திருந்த வகுப்புவாத பீடிகையில், 1906 டிசம்பர்-மீ, டாக்காவில், பிரிட்டிஷ் ஆட்சியின் விஸ்வாசிகள், பட்டதாரிகள் ஒன்று கூடி, அகில இந்திய முஸ்லிம் லீகின் அஸ்திவாரக்கல் நாட்டினார்கள். முஸ்லிம்களிடையே பிரிட்டிஷ் ஆட்சியின் விஸ்வாசத்தை வளர்ப்பதும், முஸ்லிம்களின் அரசியல் உரிமைகளைப் பாதுகாப்பதும், முஸ்லிம் கோரிக்கைகளை பிரிட்டிஷ் சர்க்காரிடம் பயபக்தியுடன் சமர்ப்பிப்பதும் லீகின் லட்சியங்களாக இருந்தன.

நவாப் விகாருல் முல்க் காரியதரிசியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். லீக் ஏற்பட்டு மூன்றே மாதங்களுக்குப் பிறகு அலிகார் முஸ்லிம் மாணவர்களை நோக்கி, "ஆங்கில ராணுவத்தின் சிப்பாய்களாகவே உங்களை நீங்கள் பாவிக்கவேண்டும். பிரிட்டிஷ் முடிக்காக உயிர்களை அர்ப்பணிக்கவும், ரத்தம், சிந்தவும் நீங்கள் எந்த நேரத்திலும் தயாராக இருக்க வேண்டும்" என்று நவாப் விகாருல் முல்க் பேசினார்.

முஸ்லிம் லீக் தோன்றி சில மாதங்களுக்குள் ஹிந்து மஹாசபையும் தோன்றிற்று எந்த ஒரு விளையாட்டுக்கும் குறைந்த பக்ஷம் இரண்டு விளையாடக் கூடியவர்களாவது தேவை வகுப்புவாத திருவிளையாட்டில் முஸ்லிம் லீகுடன் விளையாட துணைவன் இல்லாமல் போய்விடவில்லை இரண்டு கோஷ்டிகளையும் சேர்ந்த வகுப்பு வாத லீடர்களுக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. மேடைகளில் ஒருவரை ஒருவர் எதிர்த்து முழங்க, தேசத்தின் சுமுகமான சூழ்நிலை விஷமயமாய் மாற ஆரம்பித்தது.

1911-ல் வங்காளப் பிரிவினை ரத்தாயிற்று. முஸ்லிம் வகுப்புவாதிகள் அதிர்ச்சி அடைந்தனர். "பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரின் கொள்கை பீரங்கிக் குண்டைப்போல் முஸ்லிம் பிணங்களைத் தாண்டிச் சென்றுவிட்டது" என்று சொல்லும் அளவுக்கு நவாப் விகாருல் முல்க் போன்றவர்களும் மன வேதனை அடைந்தனர். அதையடுத்து இந்தியாவிலும் இஸ்லாமிய நாடுகளிலும் நடந்த சம்பவங்களால் இந்திய முஸ்லிம்கள் பிரிட்டிஷ் ஆட்சியை சந்தேகிக்க முற்பட்டனர்.

'அஞ்சுமனே குத்கா மே காபா' என்ற புதியதொரு ஸ்தாபனத்தை மௌலானா ஷவுகத் அலி ஸ்தாபித்தார். மௌலானா முகம்மது அலி, மௌலானா அபுல்கலாம் ஆஸாத் இருவரும் முறையே 'காம்ரேட்' 'அல்ஹிலால்' பத்திரிகைகள் வாயிலாக முஸ்லிம்களிடையே புதியதொரு அரசியல் உணர்ச்சியை உண்டாக்கினர்.

1912-ல் டாக்டர் அன்ஸாரி செஞ்சிலுவைக் கோஷ்டித் தலைவராய் துருக்கி சென்றார். மௌலானா ஷிப்லியின் பேனா முனை ஏகாதிபத்திய, வகுப்பு வாதிகளின் சூழ்ச்சிகளை அம்பலப் படுத்திக்கொண்டிருந்தது. விழிப்படைந்த ஏராளமான முஸ்லிம் வாலிபர்கள் தேசீய போராட்டங்களில் பங்கெடுத்துக் கொள்ள முன்வந்தனர். தேசத்தில் அதி தீவிரமாய்

அரசியல் விழிப்பு ஏற்பட்டது. முஸ்லிம் லீக் லீடர்கள் மட்டும் தங்களுடைய போக்கை மாற்றிக்கொள்ளவில்லை. பிரிட்டிஷ் ஆட்சியின் பழைய விஸ்வாசிகளாகவே இருந்தனர். லீகிலிருந்து முற்போக்கு வாதிகள் காங்கிரஸுடன் லீக்கை இணைக்க முயற்சித்து வந்தனர். அவர்களில் மிஸ்டர் ஜின்னுவும் ஒருவராக இருந்தார்.

1914-ல் மகாயுத்தம் ஆரம்பமாயிற்று. 1915-ல் மௌலானு ஷவுகத் அலி, மௌலானு முகம்மது அலி மௌலானு அபுல் கலாம் ஆஸாத், மௌலானு ஹஸரத் மோஹானி பாதுகாப்பில் வைக்கப்பட்டனர். மௌலானு மஹ்மூதுல் ஹஸ்ஸன், மௌலானுஹுஸைன் அகமத் மதனி, மால்டாவில் சிறைவைக்கப்பட்டனர். தலைவர்கள் கைதுசெய்யப்பட்டதால் முஸ்லிம்களிடையே கொந்தளிப்பு ஏற்பட்டது. அதனுல் 1916-ல் முஸ்லிம் லீகுக்கும், காங்கிரஸுக்குமிடையே சமரஸம் ஏற்படுவது சாத்தியமாயிற்று. சட்டசபைகளில் முஸ்லிம்களுக்கு பிரதிநிதித்வ விஷயத்தில் காங்கிரஸின் சம்மதத்தைப் பெற்று முஸ்லிம் லீக்கும் சுயநிர்ணய கோரிக்கை விடுக்கமுன்வந்தது. முஸ்லிம் வகுப்புவாதிகளின் சக்தி ஓரளவுக்கு ஒடுங்கிவிட்டது. தேசிய முஸல்மான்களும் லீகில் சேர ஆரம்பித்தனர். யுத்தம் முடிந்தவுடன் ரௌலட் சட்டம் வந்தது.

1919-ல் இந்தியாவுக்கு வழங்கப்பட்ட சீர்திருத்தங்கள் அவநம்பிக்கையளிப்பதாய் இருந்தன. ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்ச்சி பொதுவாக மக்களிடையே பரவிற்று. யுத்தத்திற்குப் பிறகு துருக்கி சம்மந்தப்பட்டவரை பிரிட்டிஷார் அனுஷ்டித்த போக்கால் முஸ்லிம்கள் வெறுப்படைந்தார்கள். அதன் பயனுக 1919-ல் கிலாபத் கமிட்டி ஜமீயத்துல் உலமா போன்ற சுதந்திர நோக்கங்கொண்ட ஸ்தாபனங்கள் ஏற்பட்டன. பிரிட்டிஷ் ஆட்சி எதிர்ப்பு முன்னணியில் காங்கிரஸுடன் ஒத்துழைத்து வேலை செய்ய ஆரம்பித்தன. மௌலானு அபுல் கலாம் ஆஸாத், மௌலானு மஹம்மது அலி கிலாபத் கமிட்டியின் ஒத்துழையாமை திட்டத்தை உருவாக்கினுர்கள். ஏறக்குறைய அதே விதமான திட்டம் மகாத்மா காந்தியால் காங்கிரஸில் உருவாயிற்று. 1920-ல் அதே திட்டம் ஜமீயத்துல் உலமாவிலும் நிறைவேறிற்று. பட்டம் பதவிகளை துறப்பது உத்தியோகங்கள், சட்டசபை பதவிகளை விடுவது, இங்கிலாந்து சாமான்களை பகிஷ்கரிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

1921ல் ஒத்துழையாமை தீர்மானம் காங்கிரஸில் நிறைவேற்றப்பட்டது. மகாத்மா காந்தி முதல் டிக்டேடராக நியமிக்கப்பட்டார். கிலாபத் கமிட்டியும் ஜமீயத்துல் உலமாவும் இயக்கத்தில் கலந்து கொண்டன. முஸ்லிம்லீக் ஒதுங்கிவிட்டது. ஒத்துழையாமையை மிஸ்டர் ஜின்னு எதிர்த்தார். எதிர்ப்பு பலிக்காமல் போகவே காங்கிரஸிலிருந்து ராஜினுமா செய்துவிட்டார். அதற்குப் பிறகு இந்தியர்களுக்கும், பிரிட்டிஷ் ஆட்சிக்கும் நடந்த கடுமையான போராட்டத்தில் எந்த ஒரு சமயத்திலும் முஸ்லிம் லீக் தென்படவேயில்லை.

1923-ல் ஒத்துழையாமை இயக்கம் முடிவடைந்தது. ஆங்கில ஆட்சியின் தூண்டுகோலுக்கு இணங்க வகுப்புவாத லீடர்கள் சுத்தி, தப்லீக் இயக்கங்களை ஆரம்பித்தனர். சூழ்நிலை மோசமடைந்தது. கலகங்களும், கலவரங்களும் நடக்க ஆரம்பித்தன. அரசியல் அரங்கம் காங்கிரஸ், ஜமீயத்துல் உலமா கைகளிலிருந்து ஹிந்துமகாசபை, முஸ்லிம் லீக் கைகளுக்கு மாறிவிட்டன. 1924-ல் துருக்கியில் கிலாபத் கலைக்கப்பட்டது. அதனுல் இந்திய கிலாபத் கமிட்டி பலஹீனமடைந்துவிட்டதால் பிற்போக்கு வாதிகள் அதையும் ஆக்ரமித்துக்கொண்டனர். காங்கிரஸ் மீது குறை கூறுவதில் முஸ்லிம் லீகுடன் கிலாபத் கமிட்டியும் சேர்ந்துகொண்டது.

1927-ல் நேருரிப்போர்ட் வெளிவந்தது. மிஸ்டர் ஜின்னு லீக் சார்பில் சில கோரிக்கைகளை விடுத்தார். அதில் பெரும்பாலானவை ஒப்புக்கொள்ளப்பட்டன. லீகிலிருந்த முற்போக்கு வாதிகள் நேரு ரிப்போர்ட்டை ஆதரித்தனர். ஆயினும் பிற்போக்கு வாதிகள் கண்டிப்பதைக் கைவிடவில்லை. அதன் பயனுக லீக் இரண்டாகப் பிரிந்தது. நேரு ரிப்போர்ட்டைக் குறித்து சர்க்காரின் முடிவு சாத்தியமில்லாமல் போய்விட்டது. ஸைமன் கமிஷனைப் பகிஷ்கரிக்கும் விஷயத்திலும் இதே நிலைமைதான் முஸ்லிம் லீகில் ஏற்பட்டது.

1929ல் இந்திய சுதந்திரக் கோரிக்கையை ஜமீயத்துல் உலமா ஏற்றுக்கொண்டுவிட்டது. அஹ்ரார் இஸ்லாம் ஸ்தாபனம் உருவாயிற்று. அதே வருஷம் கான் அப்துல் கபார்கான் எல்லைப் புறத்தில் குதாயீ கித்மத்கார் கிளர்ச்சியை ஆரம்பித்து குதாயீகித்மத்கார் ஸ்தாபனத்தை ஏற்படுத்தினுர்.

பூரண சுதந்திர கோரிக்கைக்குப் பிறகு 1930-31-ல் காங்கிரஸ் நடத்திய சாத்மீக சட்டமறுப்பு இயக்கத்தில் ஜமீயத்துல் உலமா, அஹ்ரார் இஸ்லாம், குதாயீகித்மத்கார் ஸ்தாபனங்கள் பெரும் பங்கு எடுத்துக் கொண்டன. மாபெரும் தியாகங்களைச் செய்தன. அந்த சமயத்திலும் முஸ்லிம் லீக் இருக்கு

## —: ஜமீயத்துல் உலமாவும் காங்கிரஸும் :—

வகுப்பு வாதத்தை எதிர்த்து இந்திய பார்லிமெண்டில் தீர்மானத்தை பிரேரேபித்து பேசுகையில், "ஹிந்து மகாசபை, அகாலி பார்ட்டி, ஜமீயத்துல் உலமா ஸ்தாபனங்கள் மத, கலாசார எல்லைக்குள் தங்கள் நடவடிக்கைகளை கட்டுப்படுத்திக்கொண்டதைக் குறித்து நான் சந்தோஷமடைகிறேன்" என்று அங்கத்தினர் குறிப்பிட்டார். ஜமீயத்துல் உலமாவை வகுப்புவாத ஸ்தாபனங்களுடன் இணைத்துப் பேசி சாக்குக்கு பட்டு ஒட்டுப்படை போட அங்கத்தினர் செய்த பொருத்தமற்ற முயற்சியைக்குறித்து வருந்தாமலிருக்க முடியாது. ஜமீயத்துல் உலமாவைப்பற்றி தெரிந்துகொண்டிருக்காவிட்டாலும் அங்கத்தினருக்கு காங்கிரஸ் சரித்திரமாவது தெரிந்திருக்க வேண்டும். அல்லது பண்டித நேருவையோ, சர்தார் பட்டேலையோ கேட்டுஜமீயத்துல் உலமாவைப்பற்றித் தெரிந்துக்கொண்டிருக்க வேண்டும். ஜமீயத்துல் உலமாவுக்கு வகுப்பு வாத அரசியலுடன் என்றுமே சம்மந்தம் இருந்ததில்லையென்பதை அங்கத்தினருக்கு எடுத்துச்சொல்ல விரும்புகிறோம். அரசியலில் காங்கிரஸுடன் சேர்ந்து உழைத்து இந்திய சுதந்திர போராட்டம் வெற்றியடைய ஜமீயத்துல் உலமா பாடுபட்டிருக்கிறது. இந்திய முஸல்மான்களின் பிரதிநிதித்வம் வாய்ந்த, பொறுப்புள்ள ஜமீயத்துல் உலமா ஸ்தாபனம் காங்கிரஸுடன் இருந்து வருவதாக பண்டித நேரு பிரிட்டிஷாருக்கு பல தடவைகளில் சவாலும் விடுத்திருக்கிறார். பண்டித மோதிலால் நேரு சரித்திரபூர்வமான தன்னுடைய யாதாஸ்தில் "கலப்பற்ற தேசீய அடிப்படையில் இந்தியப் பிரச்னைகளை உணர்ந்து காங்கிரஸுடன் ஒத்துழைக்கும் ஸ்தாபனம் ஜமீயத்துல் உலமா ஒன்றே" என்று குறிப்பிட்டுள்ளார். இருந்தும் கனம் மெம்பர் ஹிந்து மகாசபை அகாலி கட்சி போன்ற வகுப்புவாத தேசீய விரோதி ஸ்தாபனங்களுடன் ஜமீயத்துல் உலமாவை இணைத்துப் பேசியதும், வகுப்பு வாத ஸ்தாபனங்களைப் போல் ஜமீயத்துல்உலமாவும் தன்னுடைய போக்கை மாற்றிக் கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பதாக எண்ணி சந்தோஷித்ததும் அறியாமையாகும். இதர அங்கத்தினர்கள் அவருடைய பேச்சைக் குறித்து என்ன நினைத்தார்கள் என்பது நமக்குத்தெரியாது. ஆயினும் தேசீய முஸ்லிம்களுக்கு அதனால் எல்லையற்ற மனவேதனை ஏற்பட்டிருப்பதை நாம் மறைக்க விரும்பவில்லை. நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் பரிபூரண பங்கெடுத்துக் கொண்டவர்களின் மனதை புண்படுத்தும் பேச்சை எதிர்த்துப்பேச இந்திய பார்லிமெண்டில் ஒரு அங்கத்தினரும் முன்வராமல் இருந்தது வருந்தத்தக்க விஷயமேயாகும். உண்மையில் ஜமீயத்துல் உலமா தன்னுடைய வகுப்புவாத மற்ற அரசியல் நடவடிக்கைகளிலிருந்து விலகி வகுப்புவாத அரசியலுக்கு சாவுமணி அடித்து, பிற்போக்கு சாபக்கேட்டிலிருந்து தேசத்தைக் காப்பாற்ற தன்னுடைய நியாயமான உரிமையையும் அற்பணிக்கத் தயங்கவில்லை யென்றே சொல்ல வேண்டும். ஜமீயத்துல் உலமாவின் முடிவை சரிவர உணர்ந்து இனி ஜமீயத்தின் சகிப்புத் தன்மையையும், பெருந்தன்மையையும் தவறாக பிரயோஜனப்படுத்திக் கொள்ள முயற்சிகள்நடக்காதென எதிர்பார்க்கிறோம்

---

மிடம் தெரியாமலேயே இருந்தது. வீட்டுக்குள் உட்கார்ந்துகொண்டு முஸ்லிம் கோரிக்கைகளின் அட்டவணையை அதிகரித்துக் கொண்டிருந்தது. தியாகத்தில் லீக் எவ்விதத்திலும் பங்கெடுக்கவில்லை.

1937-ல் மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரி சபைகள் ஏற்பட்டன. முதல் நாள் வரை பிரிட்டிஷ் ஆட்சியின் விரோதிகளாக இருந்தவர்கள் நிர்வாகிகளாக்கப்படுவதைக் கண்டு முஸ்லிம் லீக் ஏமாற்றம் அடைந்தது. நீண்ட நாட்களாக பிரிட்டிஷ் ஆட்சிக்கு காட்டி வந்த விஸ்வாசம் அலட்சியம் செய்யப்படுவதைக்கண்டு மனம் புழுங்கிற்று. உடனே முற்றிலும் புதியதொரு முறையை கையாள ஆரம்பித்தது. காங்கிரஸ் மந்திரி சபைகள், குறிப்பாக முஸ்லிம்கள்மீது அக்ரமம் செய்வதாக முதலில் பறை சாற்ற ஆரம்பித்தது அது வெற்றியளிக்காமல் போகவே 1940-ல் பாகிஸ்தான் எனற விசித்திர கோரிக்கை வெளிவந்தது.

இன்று பாகிஸ்தான் முஸ்லிம் லீகிக்கு கிடைத்து விட்டது. ஆனால் அதற்காக முஸ்லிம் லீக் எவ்வித தியாகமும் செய்யவில்லை பிரிட்டிஷ் நலன்களுக்காக பிரிவினை அவசியம். எனவே பிரிட்டிஷார் பாகிஸ்தானை ஏற்படுத்தினர். இந்தியாவில் திரும்பி வருவதற்காக திறந்து வைக்கப்பட்டிருக்கும் கள்ளக் கதவுதான் பாகிஸ்தான்.

பாகிஸ்தான் ஏற்பட்டபிறகு இந்திய முஸல்மான்களுக்கு பரிபூரண பாதுகாப்பு கிடைத்துவிடும் என்று சொல்லப்பட்டு வந்தது ஆனால் இன்று பாகிஸ்தான் கானல் நீராகப்போய்விட்டது மட்டுமின்றி நாலரைக் கோடி முஸ்லிம்களை பாதாளத்தில் ஆழ்த்திவிடக்கூடிய ஒருசுழலாகவே அமைந்திருப்பதை நாம்கண்டு கொண்டோம். முஸ்லிம்களின் வகுப்புவாத அரசியலின் தூண்கள் இரண்டு. (1) ஹிந்துக்களை நம்பாமல் வெள்ளையர்களை நம்புவது. (2) சிறுபான்மை பாதுகாப்பின் பெயரால் தேசீய போராட்டங்களில் முஸ்லிம்கள் கலந்துகொள்ளாமல் விலக்கி வைத்ததுடன் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போடுவது.

மக்கள் வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட பொருளாதார, கலாச்சார பிரச்னைகளில் இயற்கையாகவே வகுப்புவாத ஸ்தாபனங்கள் கவனம் செலுத்த முடியாமல் போய்விடுவதால் பிற்போக்கு வாதிகள் சுலபமாக அவ்வித ஸ்தாபனங்களை ஆக்ரமித்துக்கொள்கின்றனர். எனவே ஹிந்து முஸ்லிம் மனக்கசப்பை வளர்த்து வகுப்புப் பிணக்கை உண்டு பண்ணியதைத் தவிர, வேறு எவ்வித சேவையும் செய்யாத பேர்வழிகள், முஸ்லிம்களின் தலைவர்களாகிவிட்டார்கள்.

சென்ற வாரத் தொடர்ச்சி

# இதை சிந்தனை செய்திடுக.

—[ K. R. பசுபதி, கரூர். ]—

7. நபிநாயகத்தின் மொழிகளைப் பின்பற்றாது, பணநாயகத்தைப் பின்பற்றும் முஸ்லிம் வியாபாரிகளாலும் சமுதாயம் நிலை குலைகின்றது. முஸ்லிமும் தன் உண்மைகளை காற்றிலே பறக்க விட்டுவிட்டான். மக்களைச் சுரண்டுவதா முஸ்லிம் தர்மம்? கூலியைக் குறைப்பதா முஸ்லிம் தர்மம்? தர்மத்தை தவறவிடும்படி இஸ்லாம் கூறுகிறதா? இஸ்லாம் ( அமைதி ) இல்லையா! இதோ படியுங்கள், முஸ்லிம், என மார் தட்டும் மனித வர்க்கமே!

4—12—47-ல் "நூருல் இஸ்லாம்" பத்திரிகையிலே ஜனாப் பீகம் அம்மையார் எழுதியுள்ளதை! "ஊராருக்கு உபதேசிக்கும் ஆலிம் ஒருவர் இருக்கிறார். அவர் "ஹதீது" சொல்லும் பெரியாராக இருப்பதால் அவர் வீட்டாருக்குப் பல இடங்களில் விருந்து உண்டு. மிஞ்சும் அரிசி கள்ள விற்பனைக்குப் போகின்றது." உரியகாலத்தே உணவுப் பொருளை மக்களுக்கு வழங்காது, ஏமாற்றி சேமித்து அதிக விலைக்கு விற்றல், வட்டியைப் போன்ற ஒரு குற்றம் என இயம்பும் இஸ்லாத்தில் இஸ்லாமியர்களாலேயே இத்தகைய கொடுமைகள் நடைபெறுவதைப் பார்க்க என் நெஞ்சம் நெக்குராதிருக்குமா?"

இஸ்லாமியரில் இம்மாதிரி தர்ம நெறி பிறழ்ந்து நடப்பவன், கள்ளமார்க்கட், சுரண்டல் இவற்றிடம் தோழமை பூண்டவன். இப்படிப்பட்டவர்தான் இன்றைய நிலைக்குக் காரணம். இவர்கள் மாத்திரம் தார்மீக அடிப்படையை நழுவிவிட்டவர்களல்ல! இதோ கிருஸ்தவர்கள்!

8. அன்பே உருவான ஏசு மஹானை பின்பற்றுபவர்கள். ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தைக் காட்டு என்ற பொன்மொழியைப் பின்பற்றுவதாகச் சொல்லிக்கொள்ளும் பரம்பரையும், தங்கள் வேத தர்மத்தின், அடிப்படையை நழுவவிட்டனர். அதோகதிக்கு ஆளாகினர். நாட்டு மக்களை பட்டரைமூலம், வியாபார மூலம், கள்ள மார்கட் மூலம் சுறண்டுகின்றனர். பெரிய பணக்கார வர்க்கமாக மாறிவிட்டனர். ஆனால் அவர்கள் வேதம்சொல்வது என்ன? "உன்னிடத்திலே இரண்டு கோட்டுகள் இருந்தால் ஒரு கோட் இல்லாதவனுக்குக்கொடு "இந்த சமதர்மம் இன்றுள்ளதா" ஊசித்துவாரத்தின் வழியே ஒரு ஒட்டகம் நுழைந்து வந்துவிடும்; ஆனால் ஒரு பணக்காரன் சுவர்க்கம் செல்லமுடியாது 'என்று பைபிள் என்ற சோஷலிச நூல் சொல்லுகின்றதே! இதை கிருஸ்து வழியை பின்பற்றுகிறோம் என்பவர்கள் பின்பற்றுகிறார்களா? இல்லை. மர்மத்தை விட்டனர். தேசம் திணறுகின்றது. கிரிஸ்தவன் உண்மையான கிரிஸ்தவனாக மாறவேண்டும்.

9 இம்மாதிரி உணவுப்பொருளைப் பதுக்கி ஊரைச்சுரண்டி, கூலியை மறுத்து, ஏழையின் குரல்வளையை நெறுக்கும் நாசக்கையை விலங்கிடவேண்டாமா? தர்மம் தவறிய இம்மனிதர் தீர்ப்புநாளில் ஆண்டவனுக்கும், மன சாக்ஷிக்கும் லஞ்சம் கொடுத்து வளைத்துவிட முடியாது. இவர்களை தண்டிப்பது சமூகத்தொண்டு. சமுதாயத்தில் உள்ள கள்ளமார்க்கட் கழுகுகள், தார்மீகத்தை விட்ட தறுதலைகள், இவர்கள் போன்ற கெட்டவர்கள் அழிந்தால் தான் தேசம் விமோசனமடையும்.. இதற்கு காந்தீயம் சாலச்சிறந்த வழிகாட்டும். இவர்கள் யாவரும் தர்மத்தைக் கைக்கொண்டு பெருந்தன்மையாக மாறவேண்டும். இந்து என்று சொல்லி தர்மத்தைக் கைவிடுபவன் இந்து மத விரோதி. முஸ்லிம் என்று சொல்லி முஸ்லிம் தர்மத்தை தலைகீழாக்குபவன் இஸ்லாத்தின் தலைசிறந்த விரோதி. கிரிஸ்தவன் என்று சொல்லி தர்மத்தைப் பின் தொடராதவன். ஏசுவை காட்டிக்கொடுத்து யூடாபோன்றவனாவான். ஆகையால் இவர்களிடத்தில் புரட்சி ஏற்படுத்த, சிந்தனையில் விழிப்பேற்படுத்த காந்தீயத்தைச் சொல்வோமாக இவர்களை அழிப்பது என்றால் மாற்றுவது; ஞானஸ்நானம் செய்விப்பதுதான் "இன்னா செய்தார்க்கு இன்னா செய்யாது ஒருத்தல், அவர் நாண நன்னயம் செய்துவிடல்" என்ற குறளை பின்பற்றுவோமாக! இந்த தர்ம சாஸ்திரக் கொள்கைகளை, ஏட்டளவில் உள்ள சட்டரீதியாக்கி, சமுதாயத்தை அநுஷ்டிக்கச் செய்ய அரசியலாரும் அறிஞரும் முன்வரவேண்டும்.

10 ஆத்மீக வளர்ச்சி குன்றியுள்ள பணக்காரர் அனாவசியமாகவே ஏழையைக் குற்றம் சாட்டுகிறார்கள். தாங்கள் சுகமாக வாழ, பலர் சாகத்தான் வேண்டுமென்கிறார்கள். எங்கு நோக்கினும் சுரண்டல், பொய், ஏமாற்றுதல் இவைகளே நிரம்பியுள்ளன. இவ்வளவையும் செய்துவிட்டு பாமர ஏழை மக்கள்

மேல் பழியைப் போடுகிறார்கள். டாக்டர் உண்மையான மருந்தைத் தருவதில்லை. பச்சைத்தண்ணீரை பரமாமிர்தம் என்கிறான். வியாதியை வளர்க்கிறான். வளர்பிறையென பில்லையும் வழங்குகிறான்! டாக்டர்கள் எதற்காக உள்ளனர்? வியாதியே வராது தடுக்கவே தவிர, வந்ததை வளர்க்க அல்ல! இதேபோல வியாபாரி தன் சுயநலத்துக்காக இருக்கக் கூடாது. ஒரு ஊரின் ஜீவன்பூராவும் அந்த ஊரின்வியாபாரிகளின் கையில் உள்ளது. அந்த நபர்கள் "இல்லை" என்று கையை விரித்துவிட்டால், மக்கள் திண்டாடுவார்கள் தர்ம ரீதிப்படி வியாபாரி என்பவன் மக்களுக்கு வேண்டியதை, சுலபமாகக் கிடைக்கச் செய்யவேண்டும். அதாவது ஒருரூபாய்க்கு ஒருபடி அரிசி விலைக்கு வாங்கி, தன்னூர் மக்களுக்கு ஒரு ரூபாய்க்கு 4-படியே அரிசி விற்கவேண்டும். இவன்தான் உண்மையான வியாபாரி. வியாபாரிக்கு நஷ்டமேற்படுமென்றால் அது உண்மையில் நஷ்டமல்ல! புண்யமானது, வியாபாரி என்பவன் ஒரு கப்பலோட்டி போல. கப்பல் கவிழ்ந்தாலும், கப்பலில் உள்ளவர்களைக் காப்பாற்றிப் பிறகே தன்னைக் காப்பாற்றிக் கொள்வான். இல்லையேல் அந்த முயற்ச்சியிலே தியாகம் செய்வான். கப்பலோட்டிபோல, மக்களைக் காப்பாற்றி, அதனால் வியாபாரி நஷ்டமடைந்தால் அவனை சமுதாயம் இரக்கவிடாது காப்பாற்றியே தீரும். ஆகையால் விசித்ரமான தர்மம் தவறிய, வேலைநிறுத்தங்கள் நிரம்பிய, அமைதி குலைந்த சமுதாயத்தை சீர்படுத்தி, நேர்படுத்தி ஒழுங்கான தர்மத்தைப் பின்பற்றச் செய்யவேண்டும். இதற்கு காந்தீயம் என்ற அன்பு வழியை துணை கொள்வோம். அரசியலார் தங்கள் கடமையைச் செய்யட்டும்.

11 ஒரே முறையாவது சிந்தியுங்கள். ஏன்? பலமுறை சிந்தியுங்கள் :—

" ஓ சர்வாதிகாரிகளே! இராஜ்ய நிர்வாகிகளே! உங்கள் கையில் எடுத்த உணவு வாய்க்கு வருமுன் உள்ள நேரத்தில் இவ்வாகாரம் எல்லோருக்கும் சரிவர நிறவி வருகிறதா என்று உணர்ந்து சிந்தியுங்கள்" என்று பரஞ்சோதி ஞான வள்ளல் கூறுவதை சிந்தியுங்கள்.

12 இதையும் சிந்தியுங்கள் :—

" வயிறு சுமப்பதோசிறு உழக்கரிசி. அதற்காக சரீரம் சுமப்பதோ பல பெரும் மூட்டைகள். இதைவிட அனர்த்தமாய் தனவந்தர்கள் மனது சுமப்பதோ அனேக ஏக்கர் நிலத்துடன் வீண் விவகார விதண்டா பாரங்கள்" "மரம் வளர்ந்து செழித்தாலே அதனடியில் வளரும் புல், பூண்டு. செடி கொடிகளும் செழிக்கின்றதே! அதற்குள்ள தாரதம்யமும் இல்லையா தனவந்தர்களாகுமியில்? அறிந்தோர் எடுத்துக்காட்டியும் கேளாதிருந்தால் எல்லாம் அழிந்துபோக வேண்டுமென்று ஒரு கூப்பாடு போடுவேனேயானால் அது பலியாது போவதில்லை. ஒழிந்து அழிந்து உணர்வதை விட அறிந்து ஆசையற்ற அறிவின் நிர்வாகத்தை நடத்த முற்படுங்கள்" என்ற அண்ணல் பரஞ்சோதி ஞானத்தின் கிண்கிணியின் ஒலியையும் சிந்தித்துத் திருந்துங்கள், தான்தான் திருந்தினால் சமூகம்திருந்துமல்லவா? மனம் மாறுங்கள். வாழிய வையகம்! வாழிய அறவோர்!

ஜெய்ஹிந்த்!

"வனிஷ்"
கரப்பான், சொறி சிரங்கு.
பித்தவெடிப்பு, முகப்பருவிற்குச் சிறந்தது.
மணி நேஷனல் பார்மஸி,
காரைக்குடி,

ஆர். ஜி. கம்பெனியாரின் "ரோமா"
ஓர் சிறந்த கூந்தல் டானிக்.
ஏஜண்டுகள் தேவை. ரெஸாக் பிரதர்ஸ்,
13, கிரிபித் ரோடு, மதாராஸ் 18.

Printed by V. Jayaram at his Rama Printing Works, 129, E. Kadalangudi Street, Kumbakonam. Edited and Published by Moulana Abdul Hakeem, 13. K. South. Kumbakonam.